VISIT…

வர்ணங்கள் கரைந்த வெளி

தா. பாலகணேசன்

தா. பாலகணேசன் 24.8.63இல் பிறந்தார். தந்தை ஆறுமுகம் தாமோதரம் பிள்ளை (இளம் தமிழ் சைவப் புலவர், ஆசிரியர்), தாய் லீலாவதி.

ஆரம்பக் கல்வியை மன்னார் நானாட்டான் சிவராசா வித்தியாசாலையிலும், புங்குடுதீவு சுப்பிரமணிய வித்தியாசாலையிலும் முடித்து, உயர்கல்வியை யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியில் முடித்தார்.

1987 செப்டம்பர் புலம் பெயர்வு. 1999 பிரஞ்சு Centre Cultural d'Orly ல் நாடகப் பயில்கை.

மனைவி: சரோஜாதேவி; குழந்தைகள்: மீரா, தர்சன், வாசகன்.

தா. பாலகணேசன் கவிதைத் துறையில் கொண்டுள்ள ஈடுபாட்டைப் போலவே அரங்கியல் துறையிலும் ஈடுபாடு கொண்டு, தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றார். பிரதிகள் எழுதுவதிலும், நடிப்பதிலும் அக்கறை கொண்ட அவர் அண்மையில் சிறுவர்களுக்கான அரங்கியல் பட்டறை ஒன்றினை பிரான்ஸில் வெற்றிகரமாக நடத்தி இருந்தார். அதில் உருவாக்கப்பட்டதான 'பத்துமா' நாடகம் பலரதும் பாராட்டுக்களைப் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்தும் அரங்கியலை வளர்த்தெடுக்கும் வகையில் ஆர்வலர்களுடன் இணைந்து 'தமிழர் நிகழ் கலைக்கூடம் – பிரான்ஸ்' என்னும் அமைப்பை நிறுவியுள்ளார். அத்துடன் தன்னை வளர்த்துக் கொள்ளும் வகையில் அரங்கியல் துறை சார்ந்து பயின்றும் வருகின்றார்.

TAMILIYAL

தா. பாலகணேசன்

வர்ணங்கள் கரைந்த வெளி

காலச்சுவடு
பதிப்பகம்

விலை 50 ரூபாய்

வர்ணங்கள் கரைந்த வெளி • கவிதைகள் • ஆசிரியர்: தா. பாலகணேசன் • © தா. பாலகணேசன் • முதல் பதிப்பு: ஜூலை 2004, மறு பதிப்பு: நவம்பர் 2005 • இணைந்து வெளியிடுவோர்: தமிழியல், லண்டன்; காலச்சுவடு பதிப்பகம், 669 கே. பி. சாலை, நாகர்கோவில் 629 001, தொலைபேசி: 91–4652–278525, தொலைநகல்: 91–4652–231160, மின்னஞ்சல்: kalachuvadu@sancharnet.in • அச்சுக்கோப்பு: சுதர்சன் கம்ப்யூட்டர்ஸ் • அட்டை அச்சாக்கம்: பிரிண்ட் ஸ்பெஷாலிட்டீஸ், சென்னை 600 014 • அச்சாக்கம்: மணி ஆஃப்செட், சென்னை 600 005

Varnankal Karaintha Veli • Poems • Author: T. Balaganeshan • © T. Balaganeshan • Language: Tamil • First Edition: July 2004, Reprint: November 2005 • Size: Demy 1 x 8 • Paper: 24 kg maplitho • Pages: 120 • Copies : 1100 • Jointly Published by Tamiliyal, 27-B High Street, Plaistow, London E13 0AD, Phone : 020-8472-8323, email: ripiyer@yahoo.com and Kalachuvadu Pathippagam, 669 K.P. Road, Nagercoil 629 001, India. Phone: 91-4652-278525, Fax: 91-4652 - 231160, e-mail: kalachuvadu@sancharnet.in • Typeset: Sudarsan Computers • Wrapper Printed at Print Specialities, Chennai 600 014 • Printed at Mani Offset, Chennai 600 005 • Price Rs.50.

Selling Rights : Sudarsan Books, 74 East of Tower, Nagercoil 629 001, Phone : 91- 4652 - 228445, Fax : 91-4652-231160, E-mail : sudarsanbooks @yahoo.com

ISBN 81-87477-79-2

11/2005/S.No.131, kcp 186, 24 (1) 1100

இந்த
“வர்ணங்கள் கரைந்த வெளி”
ஆகாயக் கடல் வெளியில்
தனது வர்ணங்களைக்
கரைத்த
என் தம்பி சபேசனு(மௌலி)க்கும்
என் சகியின் சகோதரன் அன்ப(பழனியப்ப)னுக்கும்
அவனுடன் கூடவே கரைந்த
ஏனைய மாவீரர்களுக்கும்...!

தமிழியல் – காலச்சுவடு வெளியீடு

மீண்டும் வரும் நாட்கள் (கவிதைகள்)
மு. புஷ்பராஜன்; ரூ. 60

இவை நகரமும் இல்லாது கிராமமும் இல்லாது இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையில் திகழும் குருநகர் என்னும் கடலோரப் பிரதேசத்தைச் சுற்றிக் கவியும் கவிதைகள்.

வடக்கு கிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்களின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கி வியாபித்துக் கொண்டுவரும் இராணுவப் பயங்கரவாதத்தை வெளிக்காட்டி மௌனித்து நகரும் கவிதைகள்.

தன் சொந்த மண்ணில் தான் வாழ்ந்த காலங்களை, துயரும் மகிழ்வும் தரும் அக்காலங்களை, ஒருவகை nostalgic தன்மை யோடு மீட்டுப்பார்ப்பன போன்ற கவிதைகள்.

தன் ஆத்மார்த்த பார்வையைப் படரவிட்டு அவற்றின் ஒளியில் தன் விடுதலை எழுச்சிக்கு பலம் தேடும் கவிதைகள். இந்நான்கு வகைக் கவிதைகளின் சங்கமிப்பே புஷ்பராஜனின் இந்தக் கவிதைத் தொகுப்பு.

நூலுள்

வர்ணங்கள் கரைந்த வெளி

இயந்திரன் 33

தொலைந்த நாட்களும்
உயிரை மாய்க்கிற சூரியனும் 35

சின்னப் பறவை 37

வண்ணத்துப் பூச்சிகளின் நடனப் பாடல் 39

வர்ணங்கள் கரைந்த வெளி 41

இருள் வெளி 42

அப்பாவின் ஓவியம் 44

தூக்கணாங் குருவிகளின் குடிபுகல் அழைப்பு 45

வேடனும் விடுதலைப் பறவையும் 47

கரும்பனையாள் 49

நிலச் சுரங்க ஓவியங்கள் 50

ரயில் பயணம் 52

என்னுடைய சைக்கிள் 56

நாடகன் 58

குறும்பன் 60

துளைகள் 62

இசைச் சுழல் 63

காகிதப் பறவை 65

கும்மிப் பாட்டு 66

பரதேசம் போனவனின் நிலவு

கத்தும் கடல்	69
ஒரு அகதியின் கடிதம்	71
இனி	73
முற்றத்து வேம்பு	77
தூங்காத இரவு	80
நானும் என் பூவரசும்	82
வெறிபிடித்த மனிதர்களும் தாயகப் பயணிகளும்	85
அகதிக் குழந்தைகளும் சூரியனும்	88
தாய்க்கோழியும் குஞ்சுகளும்	90
வல்லமை வாராதோ	92
அகதியின் கப்பலும் காலநதிக் கரையும்	95
இனியும் ஒருகால் பிறப்புண்டோ சொல்	98
சுடரோங்கு கதிர் வீச்சு	100
பரதேசம் போனவனின் நிலவு	102
நிலவுக்குப் போதல்	107
திலீபன்	110
துயரப் பறவைகள்	112
காற்று	114

பதிப்புரை

நீண்டகாலமாகவே கவிதைத்தளத்தில் இயங்கி வருபவர்களில் தா. பாலகணேசனும் ஒருவர். இருந்த போதிலும் அவருடைய கவிதைகள் இதுவரை நூலுருப்பெறவில்லை. தற்போது அவரின் கவிதை களை (முதல் தொகுதியினை) நூலாகப் பதிப்பித்து வெளியிடுவதில் தமிழியல் மகிழ்ச்சியடைகின்றது. தமிழியலும் பதின்மூன்று ஆண்டுகால இடைவெளி யின் பின்னர்தான் மீண்டும் தனது பதிப்புப் பணியைத் தொடர்கின்றது. அதில் இக்கவிதை நூலும் ஒன்றாக இடம்பெறுகின்றது.

பாலகணேசனின் ஓசைநயமும் சந்தமும் நாடகப் பாங்கும் கொண்ட இக்கவிதைகளைத் தொகுத்து அளிப்பதன் மூலம் அவரின் கவித்துவ ஆளுமையை வெளிப்படுத்துவதும் தமிழியலின் நோக்கம் எனலாம். புங்குடுதீவைப் பிறப்பிடமாகக்கொண்ட கவிஞர் பாலகணேசன் கவிதைத்தளத்தில் மட்டுமல்லாது அரங்கியல்துறையிலும் செயலாற்றிவருபவர். அதில் நாடகப் படைப்பாக்கம், நடிப்பு, பாடல் புனைதல் என்பவற்றில் தன் ஆளுமைகளை வெளிப்படுத்தி யுள்ளார்.

இத்தொகுப்பில் அவருடைய முப்பத்தியேழு கவிதைகள் இடம்பெறுகின்றன. இவை பெரும்பாலும் கடந்த பத்தாண்டுகளில் எழுதப்பட்டவைகளாகும். தேசங்களின் எல்லைகள் தகர்த்து, விரிந்து அலை மோதிக்கொண்டிருக்கும் ஈழத்து இலக்கியத்தின்

நீட்சியை உரைத்துப் பார்ப்பதற்கு இவரின் கவிதை களும் உதவும் என நம்புகின்றோம். குறிப்பாக ஈழத் தின் போர்ச் சூழலையும், புலம்பெயர்ந்தோரின் இருப்பையும் இக்கவிதைகள் பாடுபொருளாகக் கொண்டுள்ளன. பிரான்ஸில் வாழ்ந்துவரும் தா. பால கணேசனின் கவிதைகளின் பின்புலத்தில் புலம் பெயர்ந்தோருக்கும் தாயகத்திற்கும் இடையேயான பரிமாற்றத் துண்டிப்பு அல்லது உறவின் துண்டிப்பு துயராய் இழையோடுவதை நீங்கள் அவதானிக்கலாம். புலம்பெயர் வாழ்வியலிலும் இலக்கியத்திலும் அரசி யல் ஏற்படுத்தியுள்ள தாக்கம் தவிர்க்கமுடியாத தொன்றாகும். அதில் கலகக் குரலும் சார்புக் குரலும் இணைந்தே பதிவாகியுள்ளன என்பது ஆச்சரியமான தொன்றுதான். அதனால்தான் புலம்பெயர் இலக்கி யத்தை ஈழத்துப் போர் இலக்கியத்தின் நீட்சியெனவும் கருத்துரைக்கப்படுகின்றது.

ஈழத்தின் முக்கியக் கவிஞர்களான மு. பொன்னம் பலம், சு.வில்வரத்தினம் ஆகியோரின் கவிதைப் பண்புகளின் தொடர்ச்சியையும் இவரின் கவிதை களில் கண்டுகொள்ளலாம். அதே வேளையில் அவர் களின் பாதிப்பிலிருந்து பாலகணேசன் விடுபடுவதை யும் இத்தொகுப்புப் பதிவுசெய்கின்றது. ஈழத்து இலக்கியப் படைப்புக்களில் கவிதை முதன்மை இடத்தை வகிப்பதாய் ஆய்வாளர்கள் சுட்டுகின்றனர். அதனைத் தக்கவைப்பதில் பாலகணேசன் முனைந்் துள்ளாரா என்பதை வாசகர்களாகிய நீங்கள்தான் கூறவேண்டும்.

பாரிஸ்
தை 2004

கி.பி. அரவிந்தன்
தமிழியல் சார்பாக

என்னுரை ஒன்று

எல்லாவற்றையும் என்னவென்று சொல்லமுடியாத
பெரும் துயர் கவ்விக்கொண்டு திரிகிறது.

அலைதலும், அடையாளமிழத்தலும்
தொலைதலும் எனக் கூவிக்கொண்டோடுகிறது
இந்த வாழ்க்கை ரயில், இருளைக் கிழித்து.

இந்த இருளைக் கிழித்து
என்னைச் சுவாசித்தபடி - என் இதய வெளியிலிருந்து
வழிகிறது வார்த்தைகள்.

உங்களோடு இருந்த காலமும் வெளியும்தான்
என்னோடும் இருந்தன.

எங்களுக்குள்ளே போர்ச்சன்னதங்களை மூட்டி,
பகையாடி பாழ்படுத்தவென்றே நிற்கின்ற
பாழ் வெளியை
பால் வெளியாக்குகின்ற
ஒரு தர்மப் பயணத்தின் கூக்குரல்.

என்னுரை இரண்டு

எச்சில் கோப்பைகள் கழுவும் தொழிலாளர்களோடும்,
இந்த நிலம் பெருக்குபவர்களோடும், சமையல் கட்டுக்களில்
சுழலும் தொழிலாளர்களோடும்,
'வர்ணங்கள் கரைந்த வெளி'யின் மௌனபாஷை
சங்கமித்துக்கொள்ளும்.

தன்னுடைய கிராமத்தை, கூடுகள் கலைந்தலையும் பறவைகள்
போலாகி,
இழந்தலையும் கிராமவாசியினுடைய சோகத்தை வாசிக்கின்ற
கவிதைகள் இவை.
தன்னுடைய அழகிய, காதல் கொள்ளுகின்ற நகரத்தைப் பிரிந்தவனின்
பாடலை இசைக்க முயன்றவனின் மூச்சு.

மொழியற்று, நிலமற்று, வேரற்று, அகதிகளாகும் இந்த நவயுகத்தில்
தாய் நிலத்தை இழந்து எவனொருவன் பூமியின் திசையெங்கும்
திசையற்று அலைகிறானோ அவனையெல்லாம் இந்த
நாதத்தின் மூலம் அணைக்க முற்பட்டிருக்கின்றேன்.

இது பெரும் புலப் பெயர்வுச் சோகத்தின் சிறு சிறகே!

என்னுரை மூன்று

இனியும் என்ன சொல்ல இருக்கிறது
இந்த 'வர்ணங்கள் கரைந்த வெளி'யில்
பிரவேசியுங்கள்.

புதிய பயண வெளியை நீங்கள் தரிசித்தல்கூடும்
அதுவே என் நட்புக்குக் கிடைத்த பெரும் பேறெனக் கருதுவேன்

வர்ணங்கள் கரைந்த வெளியில் சிறகு விரியுங்கள்,
நடவுங்கள், திரியுங்கள், பயணியுங்கள், பாடுங்கள், ஆடுங்கள்,
தேடுங்கள்.

அதனுடைய தென்றலை, புயலை, சோழகத்தை, வாடையை,
தண்மையை, சூட்டை மனம் திறந்து பேசுங்கள்.

தா. பாலகணேசன்

வர்ணங்கள் கரைந்த வெளியில் உலாவினீர்கள். இந்த உலாப்போதலில் உங்களுடன் இருந்தவர்கள்

- வர்ணங்கள் கரைந்த வெளிக்கு வர்ணம் தீட்டியவர் ஓவியர் தயா.
- வர்ணங்கள் கரைந்த வெளியைக் கருத்தும், காட்சியும் ஒழுங்குப் படிம முறையில் வளர்த்தெடுத்துச் செல்லும் விதமாகத் தொகுத் தளித்தவர் கவிஞர் கி.பி. அரவிந்தன்.
- வர்ணங்கள் கரைந்த வெளியின் சங்கீதத்தை முன் மொழிந்தவர் மு.பொ.
- வாசகனது மன வெளிகளில் வர்ணங்கள் கரைந்த வெளியை மலர வைத்தவர் இ. பத்மநாப ஐயர்.
- இன்னும் இந்த வர்ணங்கள் கரைந்த வெளிக்குத் தூரிகை யாகவும், வர்ணமாகவும், சுடராகவும், நட்சத்திரங்களாகவும், ஒளியாகவும் ஆத்மபலமாகவும் பலர் இருந்தார்கள். அவர்களின் பெயர்களை எல்லாம் குறிப்பிடுவேனாயின் ஒரு பெரும் பட்டியலாய் நீளும். எனவே என் இதயத்தில் அவர்களை என்றும் நிறைத்து வைத்திருப்பேன். எனினும் என் கவிதைப் பயணத்தில் உதவிய என்னுடைய அப்பா, கேணல் கிட்டு, சு. வில்வரத்தினம், லோறன்ஸ் திலகர், க. ஆதவன், பராண்ணர், உ. சேரன், அரவிந்தண்ணர் ஆகியோரை என்றும் நன்றியுடன் நினைவுகூருவேன்.

ᘓ வர்ணங்கள் கரைந்த வெளியின் கவிதைகளைக் கணினித் திரையில் பொறித்துத் தந்த என் செல்ல மகன் தர்சனுக்கும், என் செல்ல மகள் மீராவுக்கும் என்னுடன் கூடவே நின்று எல்லா வகைகளிலும் உழைத்த, என் பிரிய சகி சறோவுக்கும் இன்னும் இந்த வெளியில் பெயர் பொறிக்காது விடப்பட்ட என்னுயிர்த் தோழர்களுக்கும் என்றும் என் நெஞ்சு உரித்து.

ᘓ எனது கவிதைகளுக்கான வெளிகளைத் திறந்துதந்த சஞ்சிகைகள், பத்திரிகைகள், தொலைக்காட்சிகள், வானொலிகளுக்கு என்றும் என் மனமார்ந்த நன்றிகள். அந்த வரிசையில் *எரிமலை, வெளிச்சம் சஞ்சிகைகள், ஈழமுரசு, தினக்குரல்* பத்திரிகைகள், *கிழக்கும் மேற்கும், இன்னுமொரு காலடி, யுகம் மாறும், கண்ணில் தெரியுது வானம்* ஆகிய அனைத்துலகப் படைப்பாளிகளின் தொகுப்புகள், திண்ணை, எக்ஸ்சில் லீவர் இணையத் தளங்கள், T.T.N., தீபம் தொலைக்காட்சிகள், I.B.C., புலிகளின் குரல் வானொலிகள் போன்ற ஊடகங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

தா. பாலகணேசன்

நம் எண்ணங்களை மீட்டிசைக்கும் வர்ணங்கள் கரைந்த வெளி

இன்று ஈழத்தமிழர் வாழ்க்கை என்பது புலம்பெயர் தலையும் போராட்டத்தையும், அதன் விளைவாய்க் கவியும் அவலங்களையும் உள்ளடக்கிய வாழ்க்கையாகவே மாறியுள்ளது. தம் தாயகத்தைத் தக்கவைப் பதற்காகப் போராடும் போராளிகள் ஒருபக்கமாகவும், அதேவேளை பேரினவாத ஆக்கிரமிப்பாலும் அதன் வழிவந்த இராணுவ அழிப்புகளாலும் அடாவடித் தனங்களாலும் தம் சொந்த மண்ணைவிட்டு அந்நிய மண்ணுக்குப் புலம்பெயர்ந்தும், தம் மண்ணிலேயே வேற்றிடங்களுக்கும் சிங்களப் பிரதேசங்களுக்கும் இடம் பெயர்ந்தும் சதா தம் உயிரைக் கையில் பிடித்தபடி வாழ்வோடு போராடிக் கொண்டிருக்கும் தமிழீழ மக்கள் ஒருபுறமாகவும் அல்லல்படுவது, நமக்கு இதையே பறைசாற்றுவதாய் உள்ளது.

புலம்பெயர்ந்தும், சொந்த நாட்டிலேயே இடம் பெயர்ந்தும் வாழும் மக்களிடையே ஓர் இனந்தெரியாத துயரின் புரையோடல். அத்துயர் அவர்கள் விட்டுவந்த மண்ணையும் மக்களையும், அவர்களும் தாமும் படும் அவலத்தையும் சுற்றி மையங்கொள்கிறது. 'என்று நாம் எம் மண்ணுக்குத் திரும்புவோம்? என்றெமக்கு நிம்மதி ஏற்படும்?' என்ற கேள்விகளே திரும்பத் திரும்ப அவர்களைத் துளைக்க, அவர்கள் துயரில் வீழ்கின்றனர்.

இந்தப் பின்னணியில் சூல்கொண்டு, ஈழத்தமிழ் இலக்கியப்பரப்பில் எண்ணிறந்த கவிதைகள், சிறுகதைகள், விமர்சனங்கள், கட்டுரைகள் நூல்களாக அச்ச

டிக்கப்பட்டு மழைக்காலப் புற்றீசல்கள்போல் வந்து விழுகின்றன. ஆனால் இவற்றில் எத்தனை தமது தரத்தைப் பேணி இலக்கியமாய் மிளிர்கின்றன?

இது முக்கியமான கேள்வி. 'இலக்கியம்' என்று தேங்கிக் கிடக்கும் இந்தச் சேற்று நீர்ப்பரப்பில், திடீரென மொட்டவிழ்த்து நீரின்மேல் தலைநீட்டும் தாமரையாய் ஒன்றிரண்டே நிகழ்கின்றன.

அத்தகைய ஒரு நிகழ்த்தலை அல்லது மலர்தலை தா. பாலகணேசனின் 'வர்ணங்கள் கரைந்த வெளி' செய்துள்ளது என்றே சொல்லவேண்டும்.

நான் ஏற்கெனவே குறிப்பிட்ட, புலம்பெயர்ந்து வாழும் மக்களின் துயரத்தை ஏனைய கவிஞர்கள் போலல்லாது, கட்டங்கட்டமாக, அதன் பல்வகைப் பரிமாணங்களை, பரிணாம வளர்ச்சியை ஒரு கருத்தியல் பின்னணியில் நம் முன் வைக்கிறது 'வர்ணங்கள் கரைந்த வெளி' கவிதைத் தொகுப்பு.

புலம்பெயர்ந்த ஒருவன் முதலில் தான் விட்டு வந்த

'கத்தும் கடலை
காற்றுப் பெருவெளியை
கரும்பனைக் கூடலை'

நினைத்து மனம் ஏங்குகிறான். இன்னும் அவனது அப்பாட அப்பா நட்ட முற்றத்து வேம்பும், அவன் காதல் சின்னம் பொறித்த பூவரசும் அவன் நினைவில் வர, அவன் பொங்கும் மனதில் எழுங்காட்சிகள், யாழ்ப்பாணத்துக் கிராமங்களின் அழகையும் அங்கு நிகழ்ந்த துயரங்களையும் எம்முன் அள்ளி வருகின்றன.

'நானும் என் பூவரசும்' கவிதை இப்படி எம்மோடு உரையாடுகிறது.

'கன்னங்கரிய இருளில்
புதைந்து
பூவரசே
காற்றோடு நீ பேசுகின்ற
கதைதான் என்ன?

... ...
... ...

கனவுகளின் மீதும்
காற்றாடும் சிறு பொழுது தன்னிலும்
ஏங்கிட வைக்கின்ற
காதலை
என் நெஞ்சுள்
எப்படிப் புதைத்தாய?

என்னவளின் முதல் எழுத்தும்
என் பெயரின் முதல் எழுத்தும்
உன் முதுகில் பொறித்தேன்
வாழி என்றாய்!

தாழ்ந்த நின் சடை
பூமியின் நிழலாய் விழ
தணிந்த மாலைப் பொழுது தன்னில்
முதுகைச் சாய்த்து
முடிவிலா வெளியைப்பற்றிக்
கலந்திருந்த உறவின் பிரிவால்
உழல்வது நீ மட்டுமா?'

என்று, இங்கே இக்கவிதை யாழ்ப்பாணத்தின் அழகைச் சொல்லிவருகிறதென்றால், 'தூங்காத இரவு' அதன் துயரத்தை அள்ளி வருகிறது.

'காற்று கரும்பனைகளை
அசைத்து உயிர்ப்பித்தபடி
சூரியனும் முகம் சிவந்து
சீற்றத்தோடு

வேலிக்கதியாலிருந்து
துயர் உரைக்கும் ஒற்றைக் காகம்

அண்ணனின் சைக்கிள்
ஈச்சமரத்துப் பற்றைக்குள்
முட்கள் நெருடியபடி
இறுதிக் கணத்திலும்
ஓங்கியெழும் எண்ணம் கொண்டு – அவன்
கைகள் தாய் மண்ணை இறுகப் பற்றியபடி

காற்றில் மந்தமாக ஒலித்த
துப்பாக்கிச் சுடு குரல்
வீட்டின் சாளரங்களையும் உதைத்தது

விசாரணைக்கென
அழைத்துச் செல்லப்பட்ட
அப்பாவின் சாய்மனைக் கதிரை
வீட்டுத் திண்ணையில்
தனித்துக் கிடந்தது

முகாரித்தழும்
திண்ணை முற்றத்தில்
ஏற்றி வைத்த விளக்கின் சுடர் காத்து
தூங்காத இரவுகளுடன் அம்மா . . . இன்னும்

நம்பிக்கையோடு காத்திருக்கிறாள்.'

போர்க்காலத் தமிழீழ நிலவரத்தை அப்படியே நம் கண்முன் கொண்டுவருகிறது இக்கவிதை. எத்தனையோ பக்கங்களில் விபரிக்கப்படும் சிறுகதையால் கூடச் சொல்ல முடியாத விஷயத்தை, இச்சிறுகவிதை மிகத் தத்ரூபமாக எடுத்தியம்பிச் செல்கிறது.

இவ்வாறு, தான் விட்டுவந்த மண்ணின் துயர உதைப்புகளை, அங்கொன்றாய் இங்கொன்றாய் மீட்டு வரும். இத்தொகுப்பில் உள்ள முப்பத்தியேழு கவிதைகளும், வித்தியாசமான முறையில் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக, ஒன்று காட்ட முயன்றதை அடுத்து வரும் கவிதை இன்னோர் கோணத்தில் புதுமைப்படுத்துவதும் அதற்கடுத்து வரும் கவிதை வேறொரு பரிமாணத்தில் முன்வந்தவற்றை விளக்கிச் செல்வதுமாக, ஒரு குறுநாடக முகந்தரித்து நிற்கின்றன. அதாவது புலம்பெயர்ந்து வந்த ஈழத்து மனிதனொருவன் மேற்குலகின் இயந்திர வாழ்க்கையில் சிக்கியவாறே, அதிலிருந்து விடுபடமுடியாத நிலையில் தன் தாய்நாட்டையும் தன் கிராமத்தையும் சிறுவயதில் அங்கு வாழ்ந்தனுபவித்த இன்பங்களையும் மீட்டுப் பார்த்து அதை ஒரு தங்குமிடமாக்கி ஒதுங்கியவாறே, இன்றுள்ள துயரங்களுக்கெல்லாம் காரணத்தைத் தேடுகிறான். அங்கே அவனுக்கு இனம், மதம், நிறம், சாதி, அந்தஸ்து என்னும் வர்ணப்பிரிவுகளே இத்தனைக்கும் காரணமாகப் படுகிறது. ஆகவே இந்த வர்ணப்பிரிவுகளை உடைத்தெறிந்து வர்ணங்கள் கரைந்த வெளியில் சஞ்சரிக்க அவாவுகிறான். அதே வேளை ஒவ்வோர் மக்கள் குழுவுக்கும் உரித்தான

மானிட நேயத்தை வலுப்படுத்தும் உயர்ந்த மனித விழுமியங்களையும், கலை, பண்பாடுகள் என்னும் வர்ணங்களின் முற்போக்கு அம்சத்தையும் பேண விரும்புகிறான். இங்கே 'வர்ணங்கள்' என்ற வார்த்தை, பிற்போக்கு – முற்போக்கு ஆகிய இரட்டைத் தன்மைகளை வெளிப்படுத்துவனவாகப் பாவிக்கப்படுவது அழகு தருகிறது.

இதோ அவரின் முதல் கவிதையான 'இயந்திரன்' எடுத்த எடுப்பிலேயே புலம்பெயர் மக்களைச் சூழ்ந்துள்ள இயந்திரக் 'கலாசாரத்தை' மிக அழகாக வெளிப்படுத்துகிறது.

'வாழ்வின் நற்கனித் தோட்டத்திலிருந்து
துரத்தின நச்சுச் சர்ப்பங்கள்
நாம் இயந்திரராய்ப் பிறந்தோம்.'

மேற்குலகின் பண்பாட்டு விழுமியங்களைத் தழுவிய சொற்களைக்கொண்டே புலம்பெயர்ந்த ஈழத்தமிழரின் அவலநிலையை விளக்கிச் செல்கிறார் கவிஞர். சொந்தத் தாயகத்தை நற்கனித் தோட்டமாக உருவகித்த கவிஞர், அவர்களை அங்கிருந்து விரட்டிய இனவாதத்தை, நச்சுச் சர்ப்பமாகவே மிகுந்த பொருத்தப்பாட்டுடன் உருவகிக்கிறார். இன்னும் மேலே சென்று,

'இரும்பின் துண்டொன்றாலா
எனை இறைவன் படைத்திருக்கக் கூடும்?
என் விலா எலும்புருவியா
'இயந்திரனி' பிறந்திருக்கக் கூடும்?
ஏதும் அறிகிலேன் பராபரமே!'

என்று அங்கலாய்க்கிறார். இங்கே, மேற்குலகிற்குப் புலம்பெயர்ந்தவன் இயந்திர வாழ்க்கைக்குள் சிக்குப்படவில்லை, இயந்திரமாகவே மாறிவிட்டான் என்பதே சுட்டப்படுகிறது. அதனால்தான் 'இரும்பின் துண்டொன்றாலா எனை இறைவன் படைத்திருக்கக் கூடும்' என்றும் 'என் விலா எலும்புருவியா இயந்திரனி பிறந்திருக்கக் கூடும்' என்றும் கவிஞர் கேட்கிறார். இயந்திர வாழ்க்கை இவனையே இரும்புகொண்டு செய்த இயந்திரமாக மாற்றிவிட்டது. இவன் இயந்திரமென்றால் இவனது துணை – இவனது விலா எலும்புருவிச் செய்யப்பட்ட துணை – இயந்திரனியும்

இயந்திரந்தானே? உண்மை. ஆனால் கவிஞர் இத்துடன் நிற்கவில்லை.

'பாம்பின் வாய்த் தவளை போலும்
இயந்திரப் பற்களிடை
சிக்குண்டோம் பார்!'

என்று அடுத்த வரிகள் இதன் காட்சிப் பரிமாணத்தை இன்னும் அதிகரிக்கிறது. இப்போ மேற்குலகமே தனது இயந்திரமயப்பட்ட நாகரிகத்துள் வீழ்ந்துகிடக்கும் அவலத்தை,

'இதென்ன இது?
இயந்திரப் பிறப்பெடுத்த
இந்த மனிதனையும்
சர்ப்பமா மோசம் செய்தது, சர்வேசா?'

என்று கூறி இயந்திரமயமாகிப்போன இந்த மனித உருவாக்கத்துக்கும் பழைய இதிகாச சர்ப்பந்தானா காரணம் என ஓர் எள்ளலோடு கேட்கிறார் கவிஞர். மொத்தத்தில் புலம்பெயர்ந்த அகதியாக இருந்தாலும் சரி, இந்த அகதிகளையெல்லாம் மேய்க்கும் மேற்குலக எஜமானர்களாய் இருந்தாலும் சரி, இயந்திர வாழ்க்கை என்னும் சர்ப்பத்தின் வாய்ப்பட்ட தவளையின் அவலத்துக்குள்ளே வீழ்கின்றனர்.

'நிலச்சுரங்க ஓவியங்கள்' என்னும் கவிதை, மேற்குலக நகரையும் அங்கு மனித வாழ்க்கையை உறைய வைக்கும் இயந்திரத்தன்மையையும் மிக நேர்த்தியாக விபரிக்கிறது.

'சூரியனையும் சாப்பிட்டு விட்டுத்
தினவெடுக்கிறது
அடங்கித் துயிலாப் பேய் நகர்.

அசுரப் பசி எடுத்து நிற்கும்
இருளின் திடலென
எரியும் சுரங்கத் தீவாய்
பகல் இரவு உணவு விடுதிகள்
ஒவ்வொன்றும்

பந்தயக் குதிரைகள் போல
அடிமைச் சுரங்கத் திடலில்
மனிதர்கள் எனப்படுவோர் ஓடுவர்

இருளின் திட்டிறங்கிச் சென்று
எல்லைக் கயிறு பிடிக்கப்
போவாரைக் காணவில்லை

இரவின் மீட்டற் சுருதியுமறியாது
நாற்பதையும் கூட நாமிழந்து போகலாம்

உயிர்க்களை இழந்த ஓவிய நிழல்கள்
கற்குகைப் படிவென உறைந்து போகலாம்'

இது 'சூரியனையும் சாப்பிட்டு விட்டுத் தினவெடுக்கிற' மேற்குலகப் பேய்நகர் ஒன்றின் காட்சி. ஒவ்வொரு காட்சி விபரிப்பிலும் அதன் பிசாசுத்தன்மை வெளிவருகிறது.

'அசுரப் பசி எடுத்து நிற்கும்
இருளின் திடலென
எரியும் சுரங்கத் தீவாய்
பகல் இரவு உணவு விடுதிகள்
ஒவ்வொன்றும்'

என்று கூறிச் செல்லும் கவிஞர், அடுத்த காட்சியில்

'பந்தயக் குதிரைகள் போல
அடிமைச் சுரங்கத் திடலில்
மனிதர் எனப்படுவோர் ஓடுவர்'

என்று இன்றைய மேற்குலக நாகரிகச் சுழலில் அமுங்குண்டு 'பந்தயக் குதிரைகள் போல' இயந்திரமாக இயங்கும் மனிதர் பற்றிச் சொல்கிறார். எவ்வாறு மேட்டுக்குடிகளினதும், சூதாடிகளினதும் வேட்கையின் பரிதாபத்துக்குரிய குறியீடுகளாய்ப் பந்தயக் குதிரைகள் நிற்கின்றனவோ, அவ்வாறே வேலைப் பழுவில் சிக்குண்ட மக்கள், இயந்திரங்களாய் 'நான் முந்தி, நீ முந்தி' என வேலைகளுக்காக ஓடுகின்றனர் என்பதை இது மிக அழகுற எடுத்துக்காட்டுகிறது. ரி.எஸ்.எலியட் தனது 'தரிசு நிலத்தில்' காட்டும் மேற்குலக நகரின் வெற்றுப் படாடோபம் இங்கே நம் தமிழ்க் கவிதையிலும் மிக லாகவத்தோடு வந்து விழுகிறது.

இந்நிலைப்பட்ட புலம்பெயர்ந்த, அகதி வாழ்க்கை மேற்கொள்ளும் மனிதனுக்கு ஓய்வெங்கே, நிம்மதி எங்கே ஏற்படப்போகிறது? அவன் ஆசையுடன்

அணைக்கும் பிள்ளைகள்கூட அவனை இயந்திர மாகக் காணும்போது அவனுக்கு எங்கே நிம்மதி ஏற்படப்போகிறது? இதோ 'அப்பாவின் ஓவியம்' அதைத்தான் நமக்கு அறிவுறுத்துகிறது.

'வர்ணச் சோக்குக்கட்டிகளால்
குழந்தை ஓவியமொன்று வரைந்திருந்தான்
அவனது தந்தையின் பிறந்த நாளின் பரிசாக

ஒடுக்கப்பட்டவனுக்கான ஆடையை
வர்ணங்களால் நெய்த அந்தச் சின்னக் கையை
தாய் முத்தமிட்டாள்

அவ்வோவியத்தில் மூன்று கால்களும்
இரண்டு இதயமும் இருந்தன
முகில் படுக்கை விரித்திருந்தான்
தேனீக்களின் பயணப் பாதைக் கோடுகள்
போட்டிருந்தான்
முகமற்றவனாகவும்
இயந்திரமானவனாகவும் அவன்
வரைந்திருந்தான்
ஓவியத்தின் அடியில்
"எனது அப்பா" எனத் தலைப்பிட்டிருந்தான்'

இந்நிலையில் அவனுக்கு எங்கே நிம்மதி வரப்போ கிறது? அதனால் அவன் மீண்டும் மீண்டும் பழைய ஊர் நினைவுகளில் தொங்கியவாறு சஞ்சரிக்கிறான். 'அகதியின் கடிதம்' கவிதை நமக்கு அதைத்தான் சொல்கிறது.

'எத்தனை நாளைக்குத் தானம்மா
சவாரி மாடென நிற்பது?
நுகத்தடி கண்டிய காயங்கள்
கழுத்தில் மாலை போல'

மேலே 'பந்தயக் குதிரைகள்' எனக் குறிக்கப்பட்ட அவனது வாழ்க்கை இங்கே 'சவாரி மாடாக' காட்டப் படுகிறது. ஊரின் நினைவு அவனுக்கு ஊருக்கேற்ற ஒப்புவமைகளையே கொண்டுவந்து அவன் சொல்ல வந்தவற்றுக்கு வலுவேற்றுகிறது.

வீட்டு நினைவு, அவனுக்குத் தன்னோடு அகதி வாழ்க்கை வாழும் தன் குழந்தைகளைப் பற்றி எண்ண

வைக்கிறது. அவன் தன் குழந்தைகளுக்கு ஊரில் உதிக்கும் சூரியனைக் காட்டுவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறான். ஆனால் காட்டமுடிகிறதில்லை. ஊரில் அவன் பார்த்த சூரியனைக் காட்டமுடியுமா? அந்த அழகை அவர்களுக்கு அவனால் அள்ளிக் கொடுக்க முடியுமா?

'சேற்றுக்குளத்திலே கிடந்து
கும்மிருட்டு கலைய
மலரும் பொற்றாமரை போலும்
மகிழ்வினை எப்படி பிள்ளைகளுக்கு
பூத்துக்காட்டுவது?

வானுக்கும்
பூமிக்கும் நடுவே
வலிய கரும் கோடாய் நிற்கும்
பனையின் உச்சியில்
செந்தணலாய் சிரிக்கும்
சூரியனைப் பிரிந்த கதையை
பிள்ளைகளுக்கு
எந்த
முகத்தோடு சொல்லுவேன்?'

என்று அவன் மனம் அலைபாய்கிறது? குளத்தில் கும்மிருட்டுக் கலைய மலரும் பொற்றாமரையையும் பனையின் உச்சியில் செந்தணலாய்ச் சிரிக்கும் சூரிய னையும் அவன் 'பூத்துக்' காட்ட முடியுமா? அவன் மனம் துயரில் வீழ்கிறது.

ஏன் இந்தக் கொடுமை? அவர்களை அகதியாய்த் திரிகவென யார் சபித்தார்? யார் செய்த பாவம் இது? எல்லாவற்றுக்கும் காரணம் மனிதனேதான். நாகரிகத்தின் உச்சத்தைத் தொட்டுவிட்டதாகப் பீற்றிக் கொள்ளும் மனிதன் இனவாதம், நிறவாதம், மதவெறி, சாதியம், சுரண்டல், பதவிமோகம் என்று தனக்குள் இருந்து வெளிக்கிளம்பும் சாத்தானின் பிடியிலிருந்து தன்னை மீட்டெடுக்காத வரை இதுதான் தொடரப் போகிறது.

நிம்மதி எவருக்கும் கிட்டப்போவதில்லை. இங்கே தான் கவிஞர் வர்ணங்கள் கரைந்த வெளியைக் கூவியழைக்கிறார். தான் இழந்த கிராம வாழ்க்கைக்

காக ஏங்கியவர், தன் தாயகம் அடிமைப்பட்டுக் கிடப்பதையிட்டும் துன்பத்தில் வீழ்ந்தவர், தன் புலம் பெயர்ந்த வாழ்க்கை இயந்திரப்பட்டுப் போனதை யிட்டுத் துயருற்றவர், இவற்றுக்கெல்லாம் அடியோடிய காரணமாக நிற்கும், சமதர்மத்துக்கெதிரான மனித னுக்குள்ளே இருந்து கிளம்பும் 'வாதங்களை'க் கண்டு கொண்டு அவற்றின் களைதலிலேயே 'பூமிக்கனியின் சாறருந்திப் பிழைக்க வழி ஏற்படும்' என்று அவர் நினைக்கும்போது அவர் சர்வதேசியாக வருகிறார்.

இதோ வர்ணங்கள் கரைந்த வெளியில் அவர் இப்படிச் சொல்கிறார்:

'வன் முறைப் பேய் தாக்கி
கீழே வீழ்ந்து கிடக்கிற மனிதனின்
தீரா அழுகையையும்
அவனின் தீராச் சோகத்தையும்'

ஓவியன் தன் கலைவர்ணக் குழையலிட்டுக் காட்டு கிறான். ஏன் இவற்றைக் காட்டுகிறான்? நிச்சயமாக இந்த வர்ணப்பிரிவுகளைக் கடப்பதற்கே. அதனால் தான்,

'தீர்ந்த வெற்றுக் கலமாய்
நிற்கும் ஓவிய மனதுள்
தீரா வெளியின் பாய்ச்சல் நிகழும்'

என்று கவிஞர், வர்ணங்கள் தீர்ந்த, ஏற்றத் தாழ்வுகள் இல்லாத வெளியை அவாவி நிற்கிறார். அடுத்து வரும் 'இருள் வெளி' என்னும் கவிதை இதை மேலும் தெளிவுபடுத்தும்.

'ஏன் அம்மா பூமி மௌனமாய் இருக்கிறது?
சதா அவனின் கேள்வி
என்னைத் துளையிடும்
வர்ணங்கள் கரைந்த வெளியின் வசந்த
காலத்தை
வரவேற்கத்தான் பூமி
நீண்ட நாளாய்
பெரு மனதோடு காத்திருக்கிறது என்று
சொல்லி வைத்தேன்'

என்று தன் பிள்ளைகளுக்குச் சொல்லும் அவன், 'ஏன் அப்பா எல்லோரும் சண்டை செய்கிறார்கள்?' என்ற தன் பிள்ளைகளின் கேள்விக்கு,

'மனிதர்களுக்குள் வர்ணாச்சிரமப்
பிசாசுகளை
யாரோ ஏவி விடுகிறார்கள்
என்ற பேய்களின் கதையைச் சொல்ல
நினைத்தேன்
மதம் பிடித்த யானையின் பிளிறல் போன்ற
படிமக் கதை
குழந்தைகளின் தூக்கத்தைக் கெடுத்து
விடுமோ என்ற பயத்தில்
அதையய்யா, சும்மா என்றேன்'

என்று சொல்லிவரும் கவிஞர் தனக்குள் பின்வருமாறு சொல்லி முடிக்கிறார்:

'மனிதர்கள் எனப்படுவோர்
இன்னும்
தங்களது சொர்க்கம் பற்றிய கனவில்
பூமியை நரகமாகவே ஆக்கி விட்டார்கள்
அவர்கள் குரூரமாய் எழுந்து
வர்ணங்களால் வாழ்க்கைக்கு
சமாதி கட்டுகிறார்கள்

பூமி குருதியில் தெப்பமாய் நனைய
வர்ணங்களால்
கோடுகள் கிழிக்கிறார்கள்'

இவ்வாறு வர்ணங்களை வெவ்வேறு கோணங் களில் உருமாற்றிக் காட்டிப்போகும் கவிஞர் 'இசைச் சுழல்' என்னும் கவிதையில்,

'குழந்தையின் மகிழ்ச்சியைக் கொட்டித்
துளிர்க்கிறது பூமி
மெல்லிய வர்ணப் பட்டாடை சூடி
மழலை பொழிகிறது'

என்று சொல்லும்போது கலையின் உன்னத நிலையை வர்ணங்களில் காட்டும் அவர், இறுதியில் அக்கவிதையை முடிக்கும்போது,

‘காலமும் வெளியும்
ஒரு புல்லாங்குழலாய் இசைக்கிறது
பின்
எல்லா வர்ணங்களும் சிந்திக் கரையும்
மரங்களின் கீழ்
பயணம் ஒன்றிற்காக
காத்திருக்கின்ற முதியவரின் இடுப்பில்
போய்ச் செருகி
இளைப்பாறுகிறது
இன்னுமொரு கால இசைப்பிற்காக’

என்று எல்லா வர்ணங்களும் சிந்திக் கரையும் நிலையில் பயணம் ஒன்றிற்காகக் காத்திருக்கிறார். அந்தப் பயணம் எப்படிப்பட்டதாக அமையும் என்பதை நாம் யூகிக்கலாம். அந்தப் பயணம் அவர் அவாவி நிற்கும் வர்ணங்கள் கரைந்த அடுத்த இசைப்பை நோக்கியதாக அமையாதா? இதோ அவரின் ‘ரயில் பயணம்’ கவிதை அதை நோக்கித்தான் ஓடுகிறது.

கட கட கட கட கட கட
கட கட கட கட கட கட

இருண்ட கருங்கோட்டையைத்
தகர்த்துக் கொண்டு
தாவியே ஓடுது ரயில்’

என்று தொடங்கும் இக்கவிதை மனிதனால் உண்டாக்கப்பட்ட அத்தனை சுயநலக் கோட்டைகளையும் தகர்த்துக்கொண்டு ஓடத்தான் போகிறது.

❍

தா. பாலகணேசனின் ‘வர்ணங்கள் கரைந்த வெளி’ தனித்துவமான கவிதைத் தொகுப்பென்பதில் ஐயமில்லை. இயல், இசை, நாடகம் என்னும் தமிழின் முப்பிரிவுகளையும் தன் கவிதைகள் மூலம் மீட்டியும், கோடிகாட்டியும் செல்வதன் மூலம் இத்தொகுப்பிற்கு ஆழத்தையும் தனித்துவத்தையும் ஏற்படுத்துகிறார். பல கவிதைகள் நாடகத் தன்மை கொண்டு நிற்கின்றன. வண்ணத்துப் பூச்சிகளின் நடனப்பாடல், நாடகன், கும்மிப்பாட்டு, அகதிக் குழந்தைகளும் சூரியனும், ரயில் பயணம் போன்ற கவிதைகள் இதற்கு உதாரணங்கள்.

பாலகணேசன் கவிஞன் மட்டுமல்ல நாடகாசிரியனும், நாவலாசிரியனும்கூட. இவர் முதன் முதலில் நாவலாசிரியனாகவே அறியப்பட்டவர். இருபது வருடங்களுக்கு முன் வெளிவந்த இவரது ‘விடியலுக்கு முந்திய மரணங்கள்’ என்னும் நாவல், களத்தில் நின்ற ஒருவனின் போர் அனுபவங்களின் வார்ப்பாக வந்த கலைத்துவமான படைப்பு என்று பலராலும் பாராட்டப்பட்டதாகும். எழுதியவரின் பெயர் இன்றி வெளிவந்த அந்நாவல் இன்று எழுதியவர் யாரென்று அறியப்படும்போது அதன் கலைக் கனதிக்குரிய காரணம் உணரப்படுகிறது. போர்க்காலச் சூழலில் எழுதப்பட்ட முதல் நாவல் இதுவே. அவ்வாறே இப்போது வெளிவரும் ‘வர்ணங்கள் கரைந்த வெளி’ போர்க்காலச் சூழலையும் புலம்பெயர்தலையும், அங்குள்ள மனிதநேயம் வறண்ட யந்திர வாழ்க்கையையும், இவற்றுக்கெல்லாம் காரணமான மனிதருள் குடிகொண்டிருக்கும் பல்வகைப்பட்ட ஆதிக்கவெறியையும் இணைத்துக்காட்டும் முதல் கவிதை நூலாக இது நிற்கிறது. கவிதை நூலைத் தந்த கவிஞருக்கு எமது வாழ்த்துக்கள்.

மு. பொன்னம்பலம்

வர்ணங்கள் கரைந்த வெளி



இயந்திரன்

வாழ்வின் நற்கனித் தோட்டத்திலிருந்து
துரத்தின நச்சுச் சர்ப்பங்கள்
நாம் இயந்திரராய்ப் பிறந்தோம்

இரும்பின் துண்டொன்றாலா
எனை இறைவன் படைத்திருக்கக்கூடும்?
என் விலா எலும்புருவியா
இயந்திரனி பிறந்திருக்கக்கூடும்?
ஏதும் அறிகிலேன் பராபரமே!

பாம்பின் வாய்த் தவளை போலும்
இயந்திரப்பற்களிடை
சிக்குண்டோம் பார்!

இரும்புச் சங்கிலிகளால்
பிணையுண்ட எம்மை
இந்த வழிதோறும்
ஏதோ இழுத்துப்போகிறதே

இதென்ன இது?
இயந்திரப் பிறப்பெடுத்த
இந்த மனிதனையும்
சர்ப்பமா மோசம் செய்தது சர்வேசா?

எந்தப் பழத்தையும்
நாவூறச் சுவைக்க
நாதியில்லா நமக்கு
பூமிக் கனியின் சாறருந்திப்
பிழைக்க வழி எப்போது பிறக்கும்?

மனிதனுக்கு
காதலை அறிவித்தது சரிதான்
ஆனால்
மனிதனுக்குள்
இயந்திரனை எழுப்பியது மகா மோசமல்லவா?

வாழ்வின் நற்கனித் தோட்டங்களிலிருந்து
சர்வேசா,
நாம் துரத்துண்டோம் பார்
சர்ப்பம் வெற்றி கொள்ளவென்றா?

வைகாசி 2000

தொலைந்த நாட்களும் உயிரை மாய்க்கிற சூரியனும்

என் கண்ணுக்குள் விரிகிறது
நீல வானம்
அதோ!
பொன்னிறமான தங்கக் குவளையில்
சூரியன் தேநீர் கொண்டு வருகிறான்

வெள்ளித் தாம்பாளத்தில்
சந்திரன்
மல்லிகைப் பூவும்
தேன் கலந்த பாலும் கொண்டு வருகிறான்

அட சூரியனே!
அட சந்திரனே!

எவ்வளவு பெருமையாக இருந்தேன்
எத்துணை மன மகிழ்ச்சியோடிருந்தேன்
எல்லாவற்றையும்
என் கண்ணுக்கு முன்னாலேயே
இழப்பேன் என்று
நான் நினைத்தேயிராத கணங்களில்
அவை நிகழ்ந்து போயிற்று

தாய் மண்ணின் கோடையை
அனுபவிக்காமலேயே
போக நேரிட்டுவிட்டது

வசைகள் நிறைந்த
என் வாழ்க்கை பற்றி
ஒளிர் நிறமான கண்களையுடைய
என் குழந்தைகளுக்குச் சொல்வதற்கான
வார்த்தைகளும் இன்றிப் போனேன்

நானோ எனக்குள்ளே
கண்ணுக்குத் தெரியாத
விலங்கணிகலன்களோடு...
காதோர முடிகளில்
எனைப்போல் அலையும் முகில்கள்
உரசிய வெண்மை பளிச்சிடுகிறது
என் நீல வானம்
என்னுள் வர்ணம் இழந்து போகுமா?

•





சின்னப் பறவை

சின்னப் பறவையே
என்னோடு
நட்புக்கொள்ள வா!

என் அழைப்பை
அது கேட்கவில்லை
தானியம் சில கொத்தித் திரிந்தது

சின்னப் பறவையே
உனக்கு
ஒரு கவிதை பாடுகிறேன்
என்னருகில் வா!

என் அழைப்பை
அது கேட்கவில்லை

அலகில் கொத்திய குச்சியை
திடீரென எறிந்து விட்டு
கோபமாய் எழுந்து
மரக்கிளையில் ஆடியது

விலங்கும்
சிறையும்
திட்டமும்
செருக்கும்
கண்ணியுமுடைய கவிஞா!
நீயா
எனக்குக் கவிதை சொல்லித் தரப் போகின்றாய்?

மன்னித்துக் கொள்

உந்தன் சிறக்கைகளையும்
உந்தன் கூரலகையும்
உந்தன் துடிப்பையும்
உந்தன் பாட்டையும்
எந்தன் குழந்தைகளுக்காக
கேட்பதற்காகவே அழைத்தேன்!

என்ன கேள்வி
என்னிடத்தில் வேண்டிக் கிடக்கிறது

அதோ!
நான் செல்லும் திசை தோறும்
வீழ்ந்தன
என் வலிய சிறகுகளும்தான்
பொருத்துன் குழந்தைகளுக்கும்
என்று பறந்து போனது தன் பாட்டை வெளியில்

•

வண்ணத்துப் பூச்சிகளின் நடனப் பாடல்

ஆகா!
அழகிய மலை, குகை குன்றெல்லாம்
மனம் மகிழ்ந்தாடு
அன்பெனும் பூக்கள்
மலர்ந்திட மலர்ந்திடக் கூத்தாடு

இளவேனில் காற்றில்
இறகுகள் அசை அசைந்தாடு
இனித் துன்பம் இல்லையென
செட்டை அடித்தாடு

எங்கும் பரவசம் பொங்கிட ஆடு
கூடெனும் சிறையை உடைத்தெழுந்தே
குதூகலம் பொங்கவே ஆடு

படகின் துடுப்பில் குந்து
அதை வலிக்கும் தோள்களில் ஏறு
நதியின் காற்றில் மோது

ஏறு ஏறு விண்ணில் ஏறு

அள்ளிச் செல்லு மகரந்தங்களை
பூக்களின் வாசனையை
பூமியின் முகத்தில் பூசு

புயலின் ஒடியாச் சிறகுகள்
தாங்கு, தாங்கு

சிந்திய வண்ண ஒளிச் சிறகினை
சூரியக் கதிர்களில் சூட்டியே ஆடு

காற்றில் உந்தன்
அழகிய சேலையை அலைய விடு
கால மழையில்
உந்தன் எழில்
வர்ணங்களைப் பொழி! பொழி!
உன்
கோடை நாளின்
படை நடத்தலைப் பாடு! பாடு!

அகதிக் குழந்தைகளில்
உன் புன்னகையை அள்ளி
வீசு!

விடுதலையின் வித வித
வர்ணங்களைத் தூவு! தூவு!

மார்கழி 1999

வர்ணங்கள் கரைந்த வெளி

சுவர்களில்
வர்ணங்கள் தீர்ந்த வாளிகள்
தொங்கிக் கொண்டிருந்தன
வான் மழைக்கு ஏங்கும்
பூமியைப் போல

வர்ணங்களில் தோய்ந்த
திரைச் சீலைகளிலேயே
நாடக காட்சிகள் அரங்கேறும்

வன்முறைப் பேய் தாங்கி
கீழே வீழ்ந்து கிடக்கிற மனிதனின்
தீரா அழுகையையும்
அவனின் தீராச் சோகத்தையும்
ஓவியன் பரவப் பண்ணுகிறான்
வர்ணங்களின் மூலக்கருவறையாய்
வர்ணச் சொரிவின்
உதயத் திசை தியானித் தெழுகையில்

பூமியின் அடியில் இருந்து எழும்
எரிமலைக் குழம்பின் உஷ்ணமும்
வர்ணமும்
கால் வழி ஏறி
கைகளில் காட்சி ரசமுறும்

தீர்ந்த வெற்றுக் கலமாய்
நிற்கும் ஓவிய மனதுள்
தீரா வெளியின் பாய்ச்சல் நிகழும்

•

இருள் வெளி

ஏன் அம்மா பூமி மௌனமாய் இருக்கிறது?
சதா அவனின் கேள்வி
என்னைத் துளையிடும்
வர்ணங்கள் கரைந்த வெளியின் வசந்த காலத்தை
வரவேற்கத்தான் பூமி
நீண்ட நாளாய்
பெரு மௌனத்தோடு காத்திருக்கிறது என்று
சொல்லிவைத்தேன்
ஆனால், அவன் விட்ட பாடாயில்லை
மேலும்
அப்பா, வர்ணங்கள் கண்களில்
வலியை உண்டாக்குமா என்று கேட்டான்?
மகிழ்சியை ஊட்டும் எனப்
பச்சைப் பொய்யைக் குழந்தைக்கு
எப்படிச் சொல்லுவேன்.
இன்னும் உடைபடா
வெள்ளைப் பெருமதில்களுள்
நெரிபடுகிற கறுப்பனினதும் ஆன்மாவின்
ஓலக் குரல் தணியாத
இந்த இருள் வெளியில்.

2

ஏன் அப்பா
எல்லோரும் சண்டை செய்கிறார்கள் என
அவனின் கேள்வி தொடர்ந்தது

மனிதர்களுக்குள் வர்ணாசிரமப் பிசாசுகளை
யாரோ ஏவி விடுகிறார்கள்
என்ற பேய்களின் கதையைச் சொல்ல நினைத்தேன்
மதம் பிடித்த யானையின் பிளிறல் போன்ற படிமக் கதை
குழந்தையின் தூக்கத்தைக் கெடுத்துவிடுமோ என்ற பயத்தில்
அதையய்யா சும்மா என்றேன்.
அசட்டுத் தனமாய் என்னைப் பார்த்துச் சிரித்தான்!

மனிதர்கள் எனப்படுவோர்
இன்னும்
தங்களது சொர்க்கம் பற்றிய கனவில்
பூமியை நரகமாகவே ஆக்கிவிட்டார்கள்
அவர்கள் குரூரமாய் எழுந்து
வர்ணங்களால் வாழ்க்கைக்கு
சமாதி கட்டுகிறார்கள்

பூமி குருதியில் தெப்பமாய் நனைய
வர்ணங்களால்
கோடுகள் கிழிக்கிறார்கள்

வர்ணம் கிழித்த கோடுகள்
சிறைக் கம்பிகளாய் நிமிர்கின்றன
வர்ணங்கள் கரைந்த வெளியின்
கனவோடு குழந்தைகளின் உலகம்.

இலை உதிர்காலம் 2002

அப்பாவின் ஓவியம்

வர்ணச் சோக்குக்கட்டிகளால்
குழந்தை ஓவியமொன்று வரைந்திருந்தான்
அவனது தந்தையின் பிறந்த நாளின் பரிசாக

ஒடுக்கப்பட்டவனுக்கான ஆடையை
வர்ணங்களால் நெய்த அந்தச் சின்னக் கையை
தாய் முத்தமிட்டாள்.

அவ்வோவியத்தில் மூன்று கால்களும்,
இரண்டு இதயமும் இருந்தன
முகில் படுக்கை விரித்திருந்தான்
தேனீக்களின் பயணப் பாதைக் கோடுகள் போட்டிருந்தான்
முகமற்றவனாகவும்
இயந்திரமானவனாகவும் அவன் வரைந்திருந்தான்
ஓவியத்தின் அடியில்
“எனது அப்பா” எனத் தலைப்பிட்டிருந்தான்

“டேய்! உன்ர அப்பாவை நீ அப்படியா காண்கிறாய்?”
அவன் தலை அசைத்துவிட்டு மௌனமாய் இருந்தான்.
அவளது மன வெளியில் கெட்ட கனவொன்று
கண்டருண்ட கனவுப் பறவை
இறக்கை அடித்துத் துடிக்கின்றது

ஐப்பசி 2002

தூக்கணாங் குருவிகளின் வீடு குடிபுகல் அழைப்பு

ஒருநாள் அதிகாலை
தூக்கணாங் குருவியின்
தூக்கலான பாடலை
மகள் மொழி பெயர்த்தாள்

கயவர் நெய்த வலையின் நூலை
அலகால் கொத்தி அறுத்தோம்
ஒளியின் வரவை உறுதி செய்தோம்
இருளை விரட்டி வாழ்வை அழைத்தோம்
நாங்கள் எல்லாம் பறவைகள்

மனிதா!
சிறையின் யன்னல் திறந்து
வெளியில் முகத்தைக் காட்டு

உலகின் அழகு மெருகு பொங்க
உழைப்பவர் நாங்கள் –
அதனால்
சிறிது ஓய்தல் செய்தோம் இங்கே
புதிய வீடு
வருக நீயும் வருகவே
புதிது பருகிப் போகவே



வேடனும்
விடுதலைப் பறவையும்

அம்பு வில் கைத்தாங்கிய வேடன்
வெறிபிடித்தலைகிற மண்ணில்
உயிர்ப்பறவையின் துடித்தெழல்
பற்றிய பாட்டே கேட்டது.

ஆதிக்க வேட்டைப் பேய்களின்
தாய் மண்ணள்ளிப் போகிற
வேட்டை தொடரும் கால இருளில்...
வேடுவர் மாறினர்,
வேடுவர்களின் காட்சிகள் மாறின
வேடுவர்களின் கை வண்ணங்கள் மாறின,
வேடுவர்களின் வேட்டை வடிவங்களும் மாறின.

வேர்களை நோக்கி
வீச்சரிவாள் பாய்ச்சுகையிலும்
விழிநீர் ஆறாய்
ஓடிச் சொரிகையிலும்
அடங்கியிருத்தலே தர்மம் என்றும்
அகிம்சை வழியே தேறும் என்றும்
அவைகள் நம்பின.

வேடன் விரித்த வலையுள்
வேடனே கிடந்து துடிக்க
மண்ணை உரசி
விடுதலைப் பறவை
வந்து பிறந்தது.

வரலாற்றை மாற்றியமைக்கும்
வல்லமை பிறந்த நாளில்
சுதந்திரப் பறவைகளின்
போரணி கிளம்பிற்று.

சுதந்திர நெருப்பின் பிறந்த நாளிலே
விடுதலைப் பெருவேள்வி
மண்ணகம் எங்கும் நிகழ்ந்திற்று.

எம்மைப் பிணித்த
கரியவலைக் கயிறு
அறுத்தெமைக்
கட்டவிழ்த்து விட்டனை வாழி.
சுதந்திரக் காட்டில்
உலவ வைத்தனன் வாழி
எனப் பண்ணெடுத்தன பறவைகள்,
பாரெல்லாம்
கொட்டின கும்மி

•

கரும்பனையாள்

கரும்பனையாள்
காளி போலும் ஆடிச் சிரிக்கிறாள்
வெளியில் கலக்கிறது
அவளின் கரிய ஓசை

தெள்ளத் தெறிக்கும்
சிவப்பு நாக்குச் சொல்லாள்
கருக்கோலை வீச்சாள்
கொட்டும் மழையிலும்
கொடும் புயலிலும்
அள்ளுண்டு போகாத
ஆணி வேருடையாள்,
ஆணி வேருடையாள்.

செந்தணல் கனலும்
தீச்சட்டிக் காவடியாள்

பேரொளிப் பெருக்காள்
காரிருள் கிழித்தாள்

வேரோடிக் கனிந்த
வாழ்வுக் கனியுண்ண
கூவி அழைக்கிறாள்.

காற்று வெளியெங்கும்
பேரோசைக் கூவலாள்
கூவி அழைக்கிறாள்
வாருங்கள் அவளின் கூவலைப் பருகுவோம்

ஆவணி 2001

நிலச் சுரங்க ஓவியங்கள்

கோயில் திருவிழா எடுத்தாற்போல
ஒளி வெள்ளத்துள் மிதக்கிறது நகரம்

சூரியனையும் சாப்பிட்டு விட்டு
தினவெடுக்கிறது
அடங்கித் துயிலாப் பேய் நகர்

அசுரப் பசி எடுத்து நிற்கும்
இருளிள் திடலென
எரியும் சுரங்கத்தீவாய்
பகல், இரவு உணவு விடுதிகள் ஒவ்வொன்றும்

பந்தயக் குதிரைகள் போல
அடிமைச் சுரங்கத் திடலில்
மனிதர்கள் எனப்படுவோர் ஓடுவர்

இருளின் திட்டிறங்கிச் சென்று
எல்லைக் கயிறு பிடிக்கப்
போவாரைக் காணவில்லை

இரவின் மீட்டற் சுருதியுமறியாது
நாற்பதையும்கூட நாமிழந்து போகலாம்

உயிர்க்களை இழந்த ஓவிய நிழல்கள்
கற்குகைப் படிவென உறைந்து போகலாம்

ஓவிய நிழல் ஒன்று:

சுரங்கத் தீவில்
தங்கம் தேடுகின்ற வாத்து



ஓவிய நிழல் இரண்டு:

வீசிய வலையுள் கறுப்பு மனிதன்
அவனின் குரல் சுரங்க நிழல்களில் துடிக்கும்

ஓவிய நிழல் மூன்று:

அடிமைக் கூலியென
தன்னைக் கூவி விற்கிறவன்

கூவலொலி கோயில் திருவிழாவில்
தொலைந்த குழந்தையின்
அழுகுரலாகவும் கேட்கலாம்

•

ரயில் பயணம்

1

கட கட கட கட கட கட
கட கட கட கட கட கட

இருண்ட கருங்கோட்டையைத்
தகர்த்துக் கொண்டு
தாவியே ஓடுது ரயில்.

அல்லாடும் சோகத்தோடு
கவிந்துள இருள் தேவியை
ஓவென அலறும் படியாய்
எழுப்பி விடுகின்றது ரயில்.

முனையில் தாங்கிய
ஒளி வெள்ளப் பாய்ச்சலில்
இருள் சேலை கிழிபட்டு
ரயில் சாளரங்களில்
பலமாய்ச் சடசடக்கின்றது.

இந்தக் கடுகதி ரயில்
எங்கே போகின்றது?

இந்தக் கடுகதி ரயில்
எங்கே போகின்றது?

பயணிகள் சிலர்
ஏக்கத்தோடு கேட்கிறார்கள்
இன்னும் சிலர்
குரலெடுத்துப் பாடுகிறார்கள்

வழித்தடம் மாறி ஓடுது கடுகதி
வாழ்வதன் நிலை தடுமாறவே
வழித்தடம் மாறி ஓடுது கடுகதி
வாழ்விடம் சேரா வலி சூழவே!

கடுகதி ஓடுது வழி தடுமாறி
கட கட கட கட கட கட
வழித்தடம் மாறியும் ஓடுது ஓடுது
காலநதியதன் ஓடமெனவே!

இது எங்கட ஊருக்குப்
போகாதா தம்பி?

இருள் எனும் தேவியின்
குரலாய் அழுகின்றது உயிரான்மா.

2

நீலவான் சொரியும்
வெள்ளிப் பூக்களை
ஆம்!
நீலவான் சொரியும்
வெள்ளிப்பூக்களை
எங்களுக்காகப் பறிக்கவே
இத்தனை வேகம் சூடி...

ஊர் மனை விளக்கொளிர
நீர் நிறை வயல்களில்
மூழ்கித் தலை துவட்டி
கனி மரக் கிளையிருந்து
வான் வெளி கிழித்து
மறைகிற சிட்டுப் போல் ரயில்
கடுகதி ரயில்

உயிர்ப்புடன் மொழிதல்
ஒடுங்கிய மனிதர்
ஒடுங்கி ஒடுங்கி ஓரமாய் நின்று
இரந்து இரந்து
அஞ்சிப் பயந்து பயந்து
கஞ்சிக்கும் கூழுக்கும்
பரதேசியென திரிந்து திரிந்து
ஜீவநதிகளின் அலைகள்
ஆர்த்து ஆர்த்து கும்மாளமிடுகின்ற
அழகு குலைந்த
முகத்தினரே எழுந்திருங்கள்.
உங்கள் இருப்பினைச் சுமந்த ரயில்
கடுகதி ரயில்

கடகட கடகட கடகட கடகட
காலநதி ஓடமெனக்
கடகட ரயிலே
அடிமையெனும் நிலையினைக்
கடகட ரயிலே
அகதியெனத் திரிதலைக்
கடகட ரயிலே

கடகடத்து ஓடுமென் ரயிலே
மலை குகை பனைவெளி
கட கடப்போ!
மாண்புறச் சுடரும்
பொன்னிறச் சூரியக்கதிர்களைச்
சூடிடப்போ!

அழகு ஒளிர
வீரியத்துடன் வீற்றிருக்கின்ற
மண்ணின் சுகந்தக் காற்று வெளியில்
நுழை!
இருள் கவிந்துள்ள
வெளிமுழுதும் பரவிய
கூவலை அடக்காதே
நீயும் கூவியெழு!
கடகட ரயிலே...

•

என்னுடைய சைக்கிள்

எனதருமை விளையாட்டு நண்பன்
கூடவே பயணித்தவன்
சக பயணியான எனது சைக்கிளின்
வழியோட்ட ஞாபகங்கள்
குழி நண்டாகப் புறப்படுகின்றன

தென்னந் தோப்பிருந்து பெயர்ந்து வருகின்ற
காற்று உந்தித் தள்ள
உருளும் சக்கரங்களின் பின்னே
தெற்குக் கடல் கிடந்து குமுறும்



பூவரச மரங்களின்
சாமர வீச்சும்
போர்க் குதிரையில்
ஏறிய வீரனைப் போலும்
நிகழ்ந்த சவாரியின் நினைவுகளும்
கடல் குமுறினாற் போல
குமுறும் என் நெஞ்சுள்

காற்று வெளிப் பரப்பெல்லாம்
அலையும் கவிதைகளின் அரற்றல்
பேச்சுத் துணையாய்
பின்னே வரும்

மீட்டும் இசை
நாதப் பொழிவின் நடுவே
வீற்றிருந்த பாடகனைப் போலும்
நிகழ்ந்த சவாரியின் நினைவுகளும்தான்

பின்னிழுத்து பின்னிழுத்து
மூச்சிரைக்கும்

அந்தோ!
கூடு திரும்பும் பறவைகள் போலும்
என் நெஞ்சக் கூடு பிளந்து
நினைவுப் பறவைகள் சிறகசைக்கும்

இருளின் திரை வீழ்கிறது
எல்லாக் காட்சிகளும் மாறுண்டன

சக்கரங்கள் உடைந்து
புதைந்த என் சைக்கிள் தேரை
மீண்டும் ஓட்டுவன் யான்
இருட்டின் திரை கிழிந்துபட
ஒளி காலும் ஒரு நாளில்
காற்றைக் கிழித்தபடி.

ஆடி 2001

நாடகன்

சக மனிதனை
சாவின் பிடியில் இருந்து
காவி வருபவன்

அவஸ்தைகளில் ஆட்பட்டவன்.
ஒருவனே அவனுள் அவனாகி நிற்க
வழக்காடுபவன்

கண்களில்
ஒளிரும் ஞானச் சுடர் ஏற்றுபவன்

மானுட வாழ்வை மறுதலித்தவர் மீது
கோபக் கனல் மூட்டுபவன்

நடிகன் இன்னும் ஈரம் உலராத
இதயம் உள்ள மனிதன்

அரங்கில் உள்ளோர்
அவன் கூடவே பயணிப்பர்

தனித்து ஒரு போதும்
அவன் இருப்பதில்லை

உயிர் நிறைந்த
மானுட சங்கீதங்கள் நிறைந்த
உயர் பண்பின்
வேரில் தழைப்பவன்

ஊழிக் காலத்தில்
உடுக்கொலி எழுப்பி
சன்னதம் கொள்ளும்
கூத்தன் எனவும் கொள்ளலாம்

கலைத் தியானிப்பில்
கருத்தரித்து
மக்களைப் பிடித்த
மாயைப் பேய்களை
விரட்டும்
மந்திரக் குஞ்சென்றும் சொல்லலாம்

அவனின் கோபச் சிரிப்பும்
தாங்கா அழுகையும்
அடங்காத் துடிப்பும்
எழுச்சியும் தாக்குகையும்
தகர்ப்பும்
ஒளி, ஒலி
அலைகளாய் மாறுகின்றன
அவன் மறைகிறான்

புரட்டாதி 1999



குறும்பன்

தறித்து வீழ்த்திய
தென்னை மரத்தின்
குற்றியில் இருந்தபடி
அவன் தன் நண்பர்களோடு கூடிச் சிரித்தான்
எத்துணை அற்புதமான ஓவியங்களை
மனதில் நிழலாட விட்டபடி

சூரியனை மேற்கில் கொண்டுபோய்
சாய்த்துவிட்டு
நிலவின் ஒளிக் கற்றைகளோடு
வீடு திரும்புவான்
புழுதிப் பூச்சேற்றிய
ஒப்பனைக்குள் மறைந்தபடி

முனிதவம் கலைந்து போனது போலப்
புறப்பட்டு வருகிற
அப்பாவின் கோபக் கனல்களையே
அவன் ஏவுகிற அஸ்திரங்கள்
ஒவ்வொன்றாய் வீழ்த்தும்.

எந்தப் பாடங்களும்
அவனுக்கு சரிவராது போகையிலும்
புவி அளப்பது மட்டும்
அவனுக்கு மிக நன்றாக வழிப்போகும்

மனக் கணக்குகளை
பிழைபடச் சொல்லுகையிலும்
அப்பா
அவனுக்காக வழக்காடுவார்

அவன்தான்
பின்னாளில்
பூமிக்காக வழக்காடும்
ஒரு போரிலும் நின்றான்
வாழ்வையும் சாவையும் வென்று.

ஆடி 2002



துளைகள்

அபஸ்வரத்தில் அழுகிறது
முறித்துப் போட்ட
புல்லாங்குழல்

வண்ணத்துப்பூச்சியின் பிரிவு
அதன் கண்களில்
மூங்கில் குழலின் சுவர்களுக்குள்
கறுப்பு மழை

பிரிவின் மூர்க்கத்தோடு
மோதுகிற காற்றின் மூச்சு
அதன் இமைத்திரையில் நடுங்கும்

இழந்தவற்றின் மீதான வலியின் துள்ளல்கள்
அதன் உடல் வெளியில் துளைகளாகும்

இறுகிப்போன இருளையும்
துளைகளிட்டு
இசைக்க வல்லேன் ஆயின்
இரவும் ஒரு புல்லாங்குழல்தான்

மார்கழி 2000

இசைச் சுழல்

குழந்தையின் மகிழ்ச்சியைக் கொட்டித்
துளிர்க்கிறது பூமி.
மெல்லிய வர்ணப் பட்டாடை சூடி
மழலை பொழிகிறது.

வர்ணங்களைக் குழைத்து ஓவியம்
வரைந்தவனைக் காணவில்லை
வான வெளியில்
ஒளிக் கற்றைக் குதிரைகளில்
வருவது அவனா?

துடியாட்டம் நிறைந்த
அடங்காச் சிறுவனாய்ப் பூமி
எங்கிருந்து புறப்பட்டன
சின்னப் பட்சிகள்?
அவைக்கு வெளியில் ஏறுகிற
கயிற்றை எறிந்தவன் யார்?
யாருக்கேனும் தெரியுமா?

பழங்கள் கனிந்துள்ள
பூமித் தோட்டத்தில்
காதலின் சுவட்டொலியை
அறிந்தவன் யார்?
மாயக் கன்னியென மலர்ந்து
மனதுள்
பாயும் அலைக் கணைகளை
தொடுக்கிறாள்

மெல்லென
அந்தி சாய்ந்த ஒரு நாள்
சூரியன்
முதிர் கிழமாய் முடங்கினான்.
மரங்களின் முடியில்
வெண்பனி படர
ஊளைக் காற்றில்
காலமும் வெளியும்
ஒரு புல்லாங்குழலாய் இசைக்கின்றன
பின்
எல்லா வர்ணங்களும் சிந்திக் கரையும்
மரங்களின் கீழ்
பயணம் ஒன்றிற்காக
காத்திருக்கிற முதியவரின் இடுப்பில் போய்ச் செருகி
இளைப்பாறுகிறது
இன்னுமொரு கால இசைப்பிற்காக.

•

காகிதப் பறவை

சுமைகள் தாங்கியும் சோராத
காகிதப் பறவையோ
அன்பு விடு தூதாய்
வந்தென் மனமுன்றலில் திரியும்

கனவுலக வாசியென்
இதயக் கூண்டுள்
சிறகடித்துத் துடிக்கையில்
நரம்புகள் சோகம் பிழியும்

நெஞ்சத்து ஆழியுட் புகுந்து
நினைவுகளின்
முத்துக் கோர்த்தனன் யான்

பனித்தன கண்கள்
பாய் விரித்தது
துயரின் படகு

இன்னும்
துறைமுகத்தை
அடையாத பயணக் கதைகளை
செப்பத் தொடங்குகையில்

எல்லாப் பக்கங்களிலும்
தொலைந்துபோன
வாழ்வை வாசிக்கத் தொடங்கினேன்

ஆவணி 2001

கும்மிப் பாட்டு

கும்மியடி பெண்ணே –
கும்மியடி எங்கள் சூரியனைப் போற்றிக் கும்மியடி
இழந்த நம் நாட்கள் மீட்டிட நீயும்
கும்மியடி பெண்ணே கும்மியடி

அடிமைகளாய் ஆன நிலை மாற
அருமைத் தாயகத்தைப் போற்றியே கும்மியடி
இரவும் பகலுமாய் இயந்திரமாய்
அடிமைத் தீவொன்றில் வாழ்க்கையடி
அவர் அவலம் தொலைய ஆடிப் பாடுங்கடி

பொய் முகங்களோடு சிரிக்கின்றாரடி
அடி சிரிக்கின்றாரடி
போலித் தனங்களால் மாய்கிறாரடி
அடி மாய்கிறாரடி
போக்கறுந்த நிலை மாற்றியே
புதுயுகம் படைக்க வாருங்கடி
புதுயுகம் படைக்க வாருங்கடி

•

பரதேசம் போனவனின் நிலவு



கத்தும் கடல்

கத்தும் கடலை
காற்றுப் பெருவெளியை
கரும் பனைக்கூடலை
விட்டுப் பெயர்ந்த
எங்களூரவர்
ஆவி துடித்து அவலப் படுகையில்

குரங்கு பிரித்த கூட்டின்
பறவைகள் போலாகி
துயரிடை மூழ்கையில்
என் துருவப் பெயர்ச்சிக்காக
நான் கையசைத்து விடை பெற்றேன்.

நான் ஒரு மனிதன்
விலங்குகளில் இருந்து வேறுபட்டவன்
உரக்கவே கத்திச் சொல்லினும்
எங்கள் ஊரின் மனிதர்கள்
நம்பார்! நம்பவே மாட்டார்!

ஊரின் மனிதர்
உடுக்கை இழந்து நிற்கையில்
இடுக்கண் களையாதவன்
தொப்புள் கொடியுறவை
வெட்டிப் பிரித்தவன்

இங்கொரு குரலெழுப்பியாய்
கோஷம் இடுபவனாய்
வேஷம் தரித்தேன்

வாழ்க்கையில்
அரசியல்வாதியைப் போல் எனக்கும்
பேசவும், வாழவும் முடிகிறது

இன்னும் நானிங்கே
துருவப் பெயர்தல்களைத் தொடர்ந்தபடிதான்
அகதி மண்ணில் காணாமற்போன
நிலவைப் போல
புன்னகை தொலைத்த அகதி மனிதர்கள்
என்னைக் கடந்து போகிறார்கள்.

வைகாசி 1996



ஓரு அகதியின் கடிதம்

சூரியனின் கீழிருக்கின்ற அம்மாவிற்கும்
அம்மாவெனும் அன்பின் நிழலாயிருக்கும்
அனைவர்க்கும்
பிறவித் துயரை எழுதுகிறேன்

சிரிக்க முயன்றும் தோற்றுப் போகிற
இயந்திர மனிதன் நான்
இறால் போட்டுச் சுறா பிடிபவர்க்கிடையில்
அகப்பட்டதென்னவோ
தலைவிதிதான்

எத்தனை நாளைக்குத் தானம்மா
சவாரி மாடென நிற்பது?
நுகத்தடி கண்டிய காயங்கள்
கழுத்தில் மாலை போல்

ஊர் நினைப்பும், உற்றார், உறவினர் பற்றிய
துடிப்பும்
எப்போதாவது ஒரு நாள்
மண்ணுக்குத் திரும்பி வருகிறதான
கனவும் நினைவும்
நிழலாய்த் தொடரும் இரட்டை வாழ்க்கை

குளத்து நீரில் தாமரை இலை போல்
ஒட்டவும் முடியாது, வெட்டவும் முடியாது
தவிக்கிற மனது

அம்மா, நீ சொன்ன கதை போல
அறுந்துபடப் போகும்
அவலத்தில் நின்று கொண்டும்
தேன் வதைக்கு ஆசைப்பட்டவனாய்...

இருந்தும் வாழ்க்கை பற்றி
கனவுகள் புதிதாய்
துளிர்ப்பதென்னவோ ஆச்சரியம்தான்

அகதிகளாய் வந்தும்
நம்மவர்க்கியல்பாகிவிட்ட
ஐரோப்பியக் கனவுகள்

கானல் நீர் பருகிட ஓடும்
புள்ளி மானாக மாய்கின்ற துயரில்
நான் மட்டுமா?

அம்மா
உனக்கோ பயம் வேண்டாம்
நீயோ
சூரியனுக்குக் கீழிருக்கிறாய்

சூரியனுக்குக் கீழே நாம்
சுதந்திரமாய் குதூகலிக்கும்
நாள் வராமலா போகும்
கலங்காதிரு.

ஐப்பசி 1996

இனி



வானம் எமது
வையம் எமது
ஊனுடல் தரித்த பிணமென உலவும்
வாழ்வினை வெறுத்து எழலும்
உயிரது துடித்தெழலுமான
வாழ்வு எமக்காகுக

தேவாலயங்கள் மீதும்
குண்டுகள் வீழும்
கூப்பிய கரங்களுடன்
முழந்தாளிட்ட நிலையில்
எனது கிராமத்தவர்கள்
பலர் மடிந்து போயினர்

வானத்தை நோக்கி
"கர்த்தாவே" எனப் பாடுகையிலும்
எல்லோருக்குமாக பிரார்த்திக்கையிலும்
கொலையுண்டு போனார்கள்

குழந்தைகள் தாய்மார்களின்
சேலைத் தலைப்புக்களை
இறுகப் பிடித்தபடியும்
இரத்தத்தில் குளித்தனர்

கரிய பனைகளின்
கீதம் நிறையும்
வெளிகளில் உரசி
எங்களின் வானம் கறுக்கும் வண்ணம்
கழுகும் பருந்தும் வட்டமிட்டன
விவசாயிகளின் தோட்டத்து
வீடுகளில்
காவலுக்கு நின்ற நாய்கள்
அவலமாய் ஊளையிட்டன

சோலைக்குயில்கள்
பாட மறந்தனவா?
சின்னதாய்த் திரியுமே
அந்தப் பட்சிகள்
அவையும்தான்
இடம் பெயர்ந்தனவோ?

வீடு, மனை, பொருள்
பந்த பாசம் அனைத்தும்
கணமதில் துறக்கும் துறவறம் பூண்டு
வெளியை நேசித்தெம் மனிதர் விரைந்தனர்

வேட்டை நாய்களால்
துரத்தப்படுகின்ற
அவலம் நிகழ்கையில்

வெளி, முற்றம்
செம்மண் தரை
மானுடம் மீது
குண்டுகள் கொட்டு!
படைகள் நடாத்து!

இறுகப் பின்னிப் பிணைந்து கிடக்கின்ற
காதல் வேர் அறுகிறதா பார்?
காதல், வேருடன் சாய்தல் நிகழுமா?
விழுதுகள் விட்டெறிந்து
விருட்சமாய்த் தளைத்தலே மேலும் நிகழும்

எங்கள்
மண்ணின் சௌந்தர்யத்தை
ஆத்மனை சுதந்திரத்தை
துடித்தெழுதலை நிறுத்த
இஸ்ரேலியனைக் கூப்பிடு!
இந்தியனைக் கூப்பிடு!
உனக்கு ஏவல் புரிய வல்ல
அனைவரையும் துணைக்கழை

பேய்களை ஏவுதல் பற்றிய
கிராமியக் கதைகளைப் படி
ஏவல் பேய்
எதையும் செய்து முடிக்காது போகையில்
எய்தவனிடம் திரும்பி வரும்

உன் காலுக்குள்
உன் தலைமாட்டுக்குள்
உன்னைச் சூழவும்
விஷம் நிறைந்த ஜந்துக்களால்

நீ அவஸ்தைப் படவும்
அல்லற் படவும்
நேரிடும் போது
எங்கள் மண்ணின்
துடித்தெழுதல் பற்றிய
இனிய பாடல்களை
நீயும்
உன் தேச மக்களும்
பாடுவதற்காக
குரல் அசைக்கத் தொடங்குவீர்கள்

அடிமைப்பட்ட எந்த மொழியினருக்கும்
அடிமைப்பட்ட எந்த இனத்தவருக்கும்
எல்லைகள் கடந்தும்
எங்களின் சுதந்திரப் பாடல்கள்
ஒலிக்கும் இனி!

அப்போது
ஊனுடல் தரித்த
பிணமென உலவும்
மானுடன் அவ்வாழ்வினை
வெறுத் தெழுவான்!

ஆடி 1995

முற்றத்து வேம்பு

ஊரில் வீட்டின் புறத்தே
என்றும் கிடந்து
உச்சஸ்தாயியில்
சப்திக்கும் ஏழாற்றுக்கடல்

அப்பாட அப்பாவின் அப்பா
நட்ட வேம்பு
உருக் கொண்டு ஆடும்
அதன் காற்றைக் குடித்து
களை தீர்த்த வாழ்வு
ஒரு காவியமாய்
என் கண்களின் வழி நடந்தது

மாரி காலத்தில் நுளம்புகள்
தொல்லை;
புகைபோட்டுக் கலைக்க
ஒரு பிடி கேட்டும்
ஊரார் வருவார்

அம்மன் கோயில் திருவிழாக்
காணும்
அற்புதத் தேர் ஊரார் கையது
ஒன்றாய்ச் சேர்ந்திட அசையும்

வேப்பிலைப் பிடிகள் சுமந்து
உருக் கொண்டு பக்தர் கூட்டம்
ஆனந்தக் கூத்தினை நிகழ்த்தும்

சின்னக் கைகள் கூப்பி
என் வேம்பின் முன்னே நிற்க
அப்புவும் ஆச்சியும்
சுற்றி வந்தொரு சூடம்
கொளுத்துவர்



வேம்பு பூச்சொரியும் நாளில்
தேன் சிட்டுக் குருவி விழாக் கூட்டும்
சூரியன் ஒளிந்து சுடர் முகம் காட்டும்
நிலவில் நனையும் வேம்பின் உச்சி மேல்
முகில்கள் உலவும்
உப்புக்காற்று வந்து மோத
வேம்பு சிலிர்க்கும்
இந்த மோகத்தினால் –
பூமி என்றும் உயிர்த்திருக்கும்

முற்றி வெடித்துக் கள்ளொழுகும்
ஓர் நாளில்
நிலவு தழுவும் வானத்திடை
எதிரி வந்து போட்ட குண்டில்
சரிந்த கதை இதயம் தாங்காது

நிச்சயம் ஓர் நாள்
வேம்பின் அடியிலிருந்து புதுத் தளிர் எழும்
புதுத் தளிர் எழுந்து தென்றலில் ஆடும்
புது வாழ்வு தொடங்கும்
சத்திய வாழ்வு என்றுமே சாகாது
வெல்லும்.

•

தூங்காத இரவு

காற்று கரும்பனைகளை
அசைத்து உயிர்ப்பித்தபடி
சூரியனும் முகம் சிவந்து
சீற்றத்தோடு

வேலிக்கதியாலிருந்து
துயர் உரைக்கும் ஒற்றைக் காகம்

அண்ணனின் சைக்கிள்
ஈச்சமரப் பற்றைக்குள்
முட்கள் நெருடியபடி
இறுதிக் கணத்திலும்
ஓங்கியெழும் எண்ணம் கொண்டு – அவன்
கைகள் தாய்மண்ணை இறுகப் பற்றியபடி

காற்றில் மந்தமாக ஒலித்த
துப்பாக்கிச் சுடு குரல்
வீட்டின் சாளரங்களையும் உதைத்தது

விசாரணைக்கென
அழைத்துச் செல்லப்பட்ட
அப்பாவின் சாய்மனைக் கதிரை
வீட்டுத் திணையில்
தனித்துக் கிடந்தது

முகாரித்தழும்
திண்ணை முற்றத்தில்
ஏற்றி வைத்த விளக்கின் சுடர் காத்து
தூங்காத இரவுகளுடன் அம்மா
இன்னும்
நம்பிக்கையோடு காத்திருக்கிறாள்

•

நானும் என் பூவரசும்

கன்னங்கரிய இருளில்
புதைந்து
பூவரசே!
காற்றோடும் நீ பேசுகின்ற
கதைதான் என்ன?

கரிய உன் சடை
விரித்து
கதறி அழுகின்ற
உன் கதையை எனக்குச்
சொல்ல மாட்டாயா?

கனவுகளின் மீதும்
காற்றாடும் சிறு பொழுது தன்னிலும்
ஏங்கிட வைக்கின்ற
காதலை
என் நெஞ்சுள்
எப்படிப் புதைத்தாய்

என்னவளின் முதல் எழுத்தும்
என் பெயரின் முதல் எழுத்தும்
உன் முதுகில் பொறித்தேன்
வாழி என்றாய்!

தாழ்ந்த நின் சடை
பூமியின் நிழலாய் வீழ
தணிந்த மாலைப் பொழுது தன்னில்
முதுகைச் சாய்த்து
முடிவிலா வெளியைப்பற்றிக்
கலந்திருந்த உறவின் பிரிவால்
உழல்வது நீ மட்டுமா?

துடி துடித்து ஆவி சோர
துவழ்கின்ற இரவின் வலிய துயரை
எப்படி உரைப்பேன்?

போக்கறுந்த வாழ்வின்
பொருள் உணர்த்தி
காற்றில்
நீ கரும் சடை விரித்தழுகின்ற கதையை
காற்று ஏந்தி வந்தென்
எதிரே திரிகின்றது

நோக்கி, நோக்கி
என் நுண்ணறிவைத் துளைத்துத்
துளைத்து
நோவுறச் செய்யும்
போக்கினால் என்னைப்
பொழிந்து, பொழிந்து
காத்திடத் துடிக்கும்
கருணைப் பெருக்கே வாழ்கிறது

நிழலாய்
காற்றாய்
தயவாய், தணிவாய்
புயலாய்
வீச்சாய், மூச்சாய்
வீசுவதென்னவோ
என் உளவெளி தன்னுள் தினமும் ஒலிக்கிறது

நீ மட்டும்
கரிய இருளில் புதைந்து
கலங்கி அழுவதாய்
எண்ணாதே
நானும்தான் என் பூவரசே!

•



வெறிபிடித்த மனிதர்களும் தாயகப் பயணிகளும்

பொல்கொட வாவியின் கரைகளில்
நாணல்கள் நெரியும்
வாவிக்குள் இருந்தும் சூரியன் எழுவானா
இப்படி முகம் சிவந்து?

இன்னும் நம்பிக்கையோடு
ஒளிக்கீற்றுக்குள் தோய்ந்து
சிறக்கை விரிக்கிறது
ஒரு சின்னப் பட்சி

கால்களில் ஒட்டிய
மண்ணின் மகரந்தத் துகள்களோடு
கனவுகளையும்
சில செய்திகளையும் கொண்டு
கிளாலியைக் கடந்த
தாயகப் பயணிகள் மீது
வெறி பிடித்த மனிதர்கள்
நாவில் நீர் சுரக்கும்
விசர் நாய்களைப் போல

கால்களை இறுகக் கட்டினார்கள்
கைகளை இறுகக் கட்டினார்கள்
பட்டினி போட்டார்கள்
பற்களை வேறாகவும்
தலைகளை வேறாகவும்
உடைகளை வேறாகவும் ஆக்கி
நீருள் அமுக்கி
கலையாகச் செய்ய
அவர்கள் கற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு நாள் இரவு
கொழும்புத் தலை நகரமெங்கும்
திரியும் மனிதர்களின் தலையில்
கொம்புகள் முளைத்திருப்பதை
குழந்தைகளும்
கண்டதாகச் சொல்கிறார்கள்

இன்னும்
அச்சத்துள் மூழ்கி
அவர்கள்
பிணம் தின்னும்
பேயாய் அலைதல் கூடும்.

வாவிகளின் கரைகளில்
வீற்றிருக்கும் அரச மரங்கள்
வேருடன் சாய்தல் நிகழும்
எந்தத் தரிசனமும்
அவர்களுக்கு
இனி
வாய்க்காது போக!

வாவிகளில் மிதப்பது
தமிழர் சடலங்கள் அல்ல
சின்னக் கனவுகள்
வாழ்தலுக்கான விருப்பங்கள்
அயலவர் என்ற நினைப்பு
தொலைவில் உள்ள
உறவுகளோடு பேசத் துடித்து
இறுதியாய் இயங்கிய இதயங்கள்!

வாவிகளில் நீர் மொள்ளவந்த
சின்னப் பெண்ணின்
கண்களில் வழியும் நீர்த்துளி
அவளைச் சிலையாய்
வடித்து
சிங்கள தேசத்து
தெருவெங்கும்
புதிதாய் நடுக!

•

அகதிக் குழந்தைகளும் சூரியனும்

சூரியனைக் காட்டுவதாக
பிள்ளைகளுக்கு
சொல்லிக் கொண்டேயிருக்கின்றேன்
“எப்படியிருக்கப்பா?”
அவர்கள் என்னை
அதட்டலாகவும் கேட்கத் தொடங்கி விட்டார்கள்

கீறிக் காண்பித்தார்கள்
அவர்களே
ஒரு நாள் வர்ணமும் தீட்டிச்
சூரியனைக் கொணர்ந்தார்கள்

சின்னவன்
தான் சிந்தை மிக நோக
தேடும் கவலை மிகச் சூழ
குந்தியிருப்பதாய் கோலம்
போட்டான்!

சேற்றுக் குளத்திலே கிடந்து
கும்மிருட்டுக் கலைய
மலரும் பொற்றாமரை போலும்
மகிழ்வினை எப்படிப் பிள்ளைகளுக்கு
பூத்துக் காட்டுவது?

வானுக்கும்
பூமிக்கும் நடுவே
வலிய கரும் கோடாய் நிற்கும்
பனையின் உச்சியில்
செந்தணலாய்ச் சிரிக்கும்
சூரியனைப் பிரிந்த கதையை
பிள்ளைகளுக்கு
எந்த முகத்தோடு சொல்லுவேன்?

அட கடவுளே!
குதூகலமான வாழ்வின்
சிறு குழந்தையாய் திரிதல்
எப்படித்தான் குலைந்து போயிற்றோ?

அகதிகளாய்த் திரிகவென
எங்களை
யார் சபித்திருக்கக் கூடும்?
செந்தணலாய்ச் சிவந்த
சூரியனை ஒரு நாளேனும்
என் பிள்ளைகளும் நானும்
கரும் கோடென நிமிர்ந்து
காணாதிருத்தல் கூடுமோ?

•

தாய்க்கோழியும் குஞ்சுகளும்

வெளி முழுவதும்
உனது சொந்தமெனக் கொண்டும்
முற்றத்தைப் பெருக்கியும்
பாட்டோடு திரிவாய்

பெட்டைக் கோழி கூவி
விடியாதென்பதெல்லாம்
அறியாதார் பேச்சு
நீ கொடுமை கண்டு கூவுவாய், கூவு!

குஞ்சுகளைப் பிரிதல் முடியா
வலியின் தீராத அழுகையை
வெளியெங்கும் அறைவாய், அறை!
தீது பகை எத்திசை நின்று வரினும்
திசைகள் கலங்க எழுவாய், எழு!

உன் இறக்கைகளுக்கு
வலுவில்லாமல் போனது கண்டா
உன் குஞ்சுகள் திக்கும் சிதறினர்?

காதலுடன்
கூப்பிட்டழைத்து ஊட்டிய
சோற்றின் கடனையும்
உன் குஞ்சுகள் நினையாது போவாரோ?

உன் சிறக்கைகளுக்குள் காத்து
தேக்கிய உயிர்ச் சூட்டின்
வெம்மை தணிந்து
அவை மாண்டிடல் கூடுமோ?

வானத்தில் வட்டமிடும் வல்லூறுகளின்
அசைவின் நிழலை
கூவிச் சொல்லுகின்ற
குரல் தானும்
செவிகளுக்கு
நின்றொலிக்காது போகுமா?

உன் குஞ்சுகள்
வதைபடவும்
வான் கழுகுகளின்
கூரலகில் கிளிபட்டு மாளவும்
சகித்திருக்காத தாய்மையின்
அழுகையை வெளியெங்கும் இறை!
உன் இறக்கையின் வலுவை ஒரு நாளாவது
உன் குஞ்சுகள் உணராது போவாரோ?

•

வல்லமை வாராதோ?

மடிகிடந்து புரண்டெழுந்த
பூமித்தாய்
தினமும் தீக்குளிக்கிறாள்
காயமுற்று மேனி நோகிறாள்
எனது மனமோ
அவள் அன்பில் கனிந்து
விழிகசிய மறுக்கிறது

மூக்கு நீர் சிந்தி
முடிச்சிட்ட காற்சட்டை கையிறுக்கி
புழுதி மண் பொடி பூசித்திரிந்த
செல்வங்கள்தான்
பூமித்தாயின் புதல்வரென எழுந்தார்

பிரபஞ்சம் முழுமையும் நிறைக்கும்
தாயன்பின் வீச்சுடன்

என் கண்மணி தேசத்தின்
காதலர் அவர்கள்
அவர்தம் நெஞ்சு நிறை காதலால்
மண் மாதா வீறு பெற்றெழுகிறாள்

அன்பாய் எமை அணைத்த
தாயின் மடி கிடந்து நான்
அம்மாவென்று அழைத்ததென்ன?
கையள்ளி மகிழ்ந்து களித்ததென்ன
காலாற நடந்து திரிந்ததென்ன?
மெய்யில்லைப் பொய்தானே?
நானும் பொய்
என் நெஞ்சும் பொய்
என் அன்பும் பொய்

என் பிள்ளை நாளை
என் தாய்த் தேசம் எதுவென்று
அழுதிடும் அவலம்
எனக்குப் புரியாமலே போகும்

தொலைப்பதற்கு இன்னும்
என்ன உள?
எஞ்சிய சில அடையாளங்களும்
எனை மீட்கப் போதுமா?

காதல் நிறையாத
கல் நெஞ்சு கொண்ட
வஞ்ச மனிதன் ஆனேன்

சுத்திச் சுத்தி வரும்
கொல்லைக் குதிரை போல் மனமோ
துக்க சாகரத்தில் சிக்கிச் சுழல்கிறது
பற்களைக் காட்டி பொய்யாய்ச் சிரித்து
கைகளைக் குலுக்கி
நலமோ என வினவி விடும்
நாட்டிய மனிதன் ஆனேன்

சிறகு கட்டித் திரிந்த
எம் மணல் குன்று
தீப்பட்டு எரிகையில்

புன்னகைத்து
கைகுலுக்கிக் கையசைத்து விடை பெற்று
கூத்தாடி முகம் தரித்தேன்

பொல்லா வினையேன்
புழுத்தலைப் புலையனேனுக்கு
வல்லமை வாராதோ
மனிதனாய் ஆவதற்கு?

•

அகதியின் கப்பலும் காலநதிக் கரையும்

மழை பெய்து கொண்டிருக்கிறது
எல்லையற்று விரியும்
வெளி

ஆழ் துயரோ நெஞ்சுள்
மெல்லெனக் கிளர்கிறது
கோடித் தந்திகளின்
நாதப் பெய்வில்
பால் நிலவு உறைந்திருக்க
பகர்ந்த வாழ்வின் இசை கூட்டுகிறது



நானும் என் தோழர், தோழிகளுமாய்
காகிதத்தில் கப்பல் செய்த
கால நினைவு
அலை அலையாய் நெஞ்சக்
கரையெங்கும் வரைகிறது

சிணுங்கலாகவும்
சீற்றமெனவுமாகிய காற்று
எங்கள் கப்பல்களைக்
கொண்டு போனதை
வலி தாளா நெஞ்சு
வீணையென மீட்டுகிறது

கை, மனம் வயப்பட
கட்டிய கப்பல்
வெள்ளிகளும் பூக்காத
வானத்தின் கீழே மிதந்தன

கண்ணீரில் நனைந்தன –
சில
காலடிகளுக்குள்ளும்
நசுங்கித் தொலைந்தன!

காற்றசைக்கச் சில கரை ஒதுங்கின
புயலடிக்கச் சில எதிர் நீந்தின
நீருள் அமுங்கின
திசைகள் கெட்டு
திக்கும் பரவியும்
போயின போயினவா?

காதலாகி நின்று கட்டிய
கப்பல் போலல்லவா
இன்று
எமது வாழ்வும் ஆயிற்று.

சிக்கித் தவிக்கின்ற
சீவனைச் சிலுவையெனச் சுமந்தபடி
திக்குகளைக் குழப்பமின்றி
பார்க்கக் கூடுதலுமின்றி
சூனியத்துள் நுழைந்தேன்
சர்வேசா!

உயிரணைய
நங்கூரமும் உடைந்து
பனிப்புயல் வீசுகின்ற
கட்டிடக் காட்டிடையே கப்பல்
சிக்கியது எங்கனம்?

வாழ்வெனும் வண்ணக் கப்பல்
கால நதிக் கரை நீந்திச் சேர
கால தேவா
கை கொடுப்பாயா?

•

இனியும் ஒருகால் எனக்கொரு பிறப்புண்டோ சொல்

ஊருக்கு ஒரு நாள்
திரும்பும் போது
என்னோடு உறவாடிய
உறவுகளை
கண் தேடிப் பனிக்கும்

என் தம்பியைத் தாலாட்ட
ஏணைச் சீலை கட்டி ஆட்டிய
கூரை முகடு கருகிச்
சாம்பல் பூத்துக் கிடக்கும்

அமைதி காக்க என வந்தவர்கள்
என் அப்பாவின் வாழ்க்கையை
அடக்கம் செய்து விட்டு
சென்ற துயர் நெஞ்சை அடைக்கும்

குண்டுகள் சிதைத்த
சுவரின் குழிக்குள்ளும்
பறவைக் குஞ்சுகள்
சிறகசைக்கும்
மெலிந்தன யாவும்
வலிய பகை எதிர்க்க
எழுந்தொரு போர்க்குணம் கொள்ளும்

எனக்கேதும் நடந்தால்
எனக் கடந்த கால்கள்
என் பூமி மிதிக்கக் கூசும்

என் பிள்ளை வருவான்
வருவான் எனக் காத்திருந்து
பூத்த கண்களுடன்
அம்மா என்னை
யார் மகனே என்பாள்?

அப்போது இன்னொரு மண்ணில்
அந்நியமாய் ஆனது போல்
என் ஆவியொடுங்கும்

மண்ணுக்கென வாழா வாழ்வும்
தேசக் கடனாற்றாச் செயலும்
என்னை நின்று நின்று கொல்ல

மண்ணுக்கென எழ
இனியும் ஒருகால்
பிறப்புண்டோ சொல்!



புரட்டாதி 1992



சுடரோங்கு கதிர் வீச்சு

சுடரோங்கு கதிர் வீச்சு
எமை வந்தும் சுடுக!

அவனுக்கு மட்டுமல்ல
எங்களுக்கும்தான்
தாய் மண்

அடிமைப்பட்ட
எமக்காகவும்தான்
அவன் ஒளிச்சுடராய் இருந்தான்

இவன் காதலால்
பூமித்தாய் செழித்தாள்

புதிய வலிமை திடம்
தளரா மனவுறுதி
இவைதான் இவன் விட்டுச் சென்றவை

இவன் தளிராய் இருந்தபோது
தாய் காட்டிய நிலவு
முற்றம்
அவன் மேனி தழுவிய தென்றல்
சிறைப்பட்டா இதுநாளும் இருக்கிறதென
அவன் கேட்கத் தொடங்கினான்

தாயின் விழி தழுவும் சோகம்
விளையாட்டல்லவே
பெற்றவளுக்காய்
பிள்ளை இவன் எழுந்தான்

காற்றாக
புயலாக
நெருப்பாக
அலையாக எழுந்தது கதையல்ல
அது அவன் வாழ்க்கை

போரினாலும்
தியாகத்தினாலும்
வலிய நெஞ்சினாலும்
வாழ்ந்து காட்டும் எம் பூமி

மண் வாழ்வதற்காய்
போராடிப்போன புதல்வனுக்கு
புயல் போர்த்தும் தாய்

இவர்களே
எழுகின்ற ஞாயிற்றின்
சுடரோங்கு கதிர் வீச்சு

சுடரோங்கு கதிர் வீச்சு
எமை வந்தும் சுடுக!

ஆடி 1993

பரதேசம் போனவனின் நிலவு

அந்தி வான் செங்கனியோ
கடலில் அமிழ
அருகிருந்த சிறு தோப்புக்
குயிலொன்றின் அழுகை பெருகும்

கடற்கரை மணலில்
கட்டிய குடிலுள்
விளக்கொளி மெல்லச் சுடரும்

கனன்றொளிர்ந்து
கடலில் அமிழ்ந்த
செங்கனியைத் தேடி
கட்டுமரங்கள்
பாயை விரிக்கும்

கடலுள் சிதறிய
நிலவின் கனிகளுள்
செங்கனியை
யாரங்கே காண்பர்?

கரையிருந்து
உள்ளம் கூவியழும் பெண்ணென
காற்று வெளியெங்கும்
நிறைந்து காயும் நிலவெனும் பேடே!

நின்னெழில் தோய் வதனம்
என் நெஞ்சமெங்கும் நிறைந்திருக்க
உனக்கு வஞ்சம் நான் இழைத்தேன்

கொஞ்சு நல் மழலைப்
பருவம் தன்னில்
கொண்டதொரு காதல்
தேய்ந்து,
தேய்ந்து போகையிலும்
உயிர் தரிக்கின்றேன்

நிலமென்னும் வீணை கொண்டு
மீட்டும் பாடல்
உயிரெங்கும் ஓடிக் காய்கிறதே

நதியொன்றில்
உன் அழகு கண்டு பேசி
நாம் நடந்தோம்
துயர் வெல்லக் கூட்டு

கடல் விரிந்த
பெரு முற்றத்தின் கனியே
உன் சாறருந்திக் களை தீர்த்த
வாழ்வொரு கனவோ?

கோயில் கோபுரத்து உச்சிக்கலசம் தன்னில்
நின்னொளிர் வதனம் நிறைந்திருக்க
பின்வீதியில்
என் பிள்ளைப் பருவம்
களிகொள்ள நடந்ததொரு காலம்.

சடைத்த மரக் கிளைகள்
விழுத்திய நிழலின் கீழிருந்து
நின் பெருக்கைப்
பருகிய வாழ்வின்
ஆறாத துயரை
யாரிடத்துச் சொல்வேன்!

வீட்டின் பின்புறத்தே
கிடந்தழும் கடலோடும்
காற்றில் ஆடும்
தென்னை, பனை மரங்களோடும்
நீ பாடிய பாட்டின்
பொருள் உணர்ந்து சொல்ல
வல்லேனா யான்
கூனல் விழுந்து
உன் மேல் குந்தியிருக்கும்
கிழவியைப் போலும்
பரதேசத்திருந்து
நானும் இழைத்து

நீ அற்ற வானம்
வேண்டுகிலேன் யான்
என் நெஞ்சத்தே
காயும் நிலவெனும் பேடே!

நீயும் அமிழ்ந்த கனியாய்
என் நேயத்து மனிதர்
நெஞ்சமெல்லாம் கிடக்கின்ற
கோலமதை நானறிவேன்

காற்றுப் பார்த்து
கடலுண்ட செங்கனி மீட்க
வலிக்கும் பாய்மரம் போலும்
நாளும்
என் நெஞ்சு பதைக்கின்றதே

"ஊர் களி கொள்ள"
உலவிய விளக்கே
உனை அணைக்க வந்தவர்
கரங்களுக்கு அஞ்சி
இழைக்கின்ற வாழ்வோர் கேடா?

•

நிலவுக்குப் போதல்

நான் குழந்தையாய் இருக்கையில்
அம்மா அழைக்க
மலை மீதேறி
மல்லிகைப் பூவும் கொண்டுவரும்

திசையெலாம் ஒடுங்கும்
மனிதர்களின் மூச்சை
சுமந்த வலியால்
உழலும் காற்று வெளியில்
இன்னும் கிடந்து காயும்

திருவிழா முடிந்த
கோயில் தெரு வீதி போல
என் நிலவுமுற்றம் கிடக்கும்

பூமிக்கு பாலாறு ஓடி வார்ப்பது போல
பொழிகின்ற நிலவில்
கனன்று, சுடர்ந்த காதல் வாழக்கை
அந்திம காலத்தை நெருங்குகிறது

என் வாழ்வோடிருந்த நிலவில்
நெருப்புப் பிடிக்கையில்
பிடில் வாசித்தவனின்
பேரப் பிள்ளையாகி
ஊரைக் கடந்தவன்

செம்புள்ளியும்
கரும்புள்ளியும்
குத்திக் குத்தி
மனது காயப்படுகிறது

ஆண்டி
குண்டி மண்ணை
தட்டி விடுகிறாற் போலவா
எல்லாம் முடிந்தது?

நேர்த்திக்கடன் பூண்ட
செதில் காவடி ஆட்டக்காரனைப் போல
தேகமெல்லாம்
குத்தி இழுக்கிற கோடி வதைகள்

பாதை தவறிய
என் கை இடுக்குகளில்
தேம்பி அழுகின்ற
என் குழந்தைகள்
என் பாதி உயிரையும் எடுக்கிறார்கள்

மூடுபனிக்குள்
சபிக்கப்பட்டது என் வாழ்வு

மாட்சிமிக்க
மண்ணின் வாழ்வு
மங்கிய நிழற்படச் சுருள்களாக
மனக் கண்களில் விரிந்து
மானுடத்தைச் சதா உறுத்தும்
ஆயினும்
இன்னும் அகதி மனிதன் நான்
நிலவுக்குப் போகிற கனவோடுதான்
இருக்கிறேன்

கனவோடிருத்தலும்
காத்திருத்தலும்
எனைத் தொடரா வண்ணம்
நிலவுக்குப் போதல் நிகழ்தல் வேண்டும்

நிலவுக்குப் போதல்
நிகழ்தல் வேண்டும்.

•

திலீபன்



நீ காற்றாயும், மழையாயும்
வருவாயாம்
எங்களின் மண்ணின்
பாட்டி சொன்னாள்

நீ எங்களின் மண்ணில்
புயலாய் வீசினாயாம்

தூரத்தில்
வான் வெளிப்பரப்பில்
மின்னலாய்த் தோன்றும்
உன் புன்னகையை
பாட்டி எங்களுக்குக் காட்டினாள்

நிலவெனச் சுடரும்
முகமும் உனக்கு
பறை எழுப்பும்
நாதத்துக்குள்
உனது பெயரின் உச்சாடனம்
எங்களின் கிராமத்தில்
பலபேரின் தூக்கத்தைக் கலைக்கிறது

விசையுறச் சுழலும்
வரமுனக்குத் தந்தது யார்?

உன் கதையை
ஊரார் சொல்லுகையில்
எங்களுக்குள்ளும்
நெருப்பெரிகிறதே

நீ எங்கள்
வானத்துச் சூரியனுமாம்
எங்கள் குடிசை முகட்டுக்குள்ளால்
ஒளிப் பொட்டுச் சிந்துகையில்
உன் வதனச் சுடரைக் கைப்பற்ற
என் தம்பியும்
நானுமாய்ச் சண்டையிடுவோம்

வானத்திலிருந்து
நட்சத்திரங்களாயும்
பூமிக்கு அழகு சேர்ப்பீர்களா?

நீங்கள்
எங்களின் வானத்திருந்து
பூமிக்கு அழகு ஊட்டுகையில்
எங்களுக்கும் சிறக்கை முளைக்கும்!

விண்ணை அளாவும்
விசையுடன் எழ

புரட்டாதி 1995

துயரப்பறவைகள்

வீரர்களே!
உங்களின் முகங்களை
ஒரு முறையேனும்
பார்க்க முடியாது போனதையிட்டும்

எங்களுக்காகவும்
நீங்கள்
எரி நெருப்பில் நின்று
களமாடியதையிட்டும்

என்றுமே காணமுடியாது போன
முற்றத்தில்
பூக்கள் மலர்வது போன்ற
உங்களின் புன்னகையையிட்டும்
நாங்கள் கலங்கினோம்

வரண்ட மனங்களில்
மழைத் துளி போன்று
சிந்தும் உங்களின் நினைவு
ஒரு வசந்த காலத்தை
எமக்கு ஞாபகப்படுத்துகின்றது.

உங்களைப் போல வாழ முடியாது
போனதையிட்டும்
உங்களுக்கருகிலேனும் நின்று
தொட்டு, ஆவி தழுவிடப் பேசும்
பாக்கியமும் இல்லாது போனதையிட்டும்
எண்ணி நாங்கள் கலங்கினோம்

வயல் வெளிகளிலோ
புல் வெளிகளிலோ
கானகங்களிலோ
நீங்கள் பாடிய பாடல்கள் எதுவுமே
செவிகளில் ஏறாது
துயரழுந்திச் சாகும்
துயரப்பறவைகளாகிய எங்களுக்கு
தற்காலிகமாகத் தங்கிய கூடுகளில்
ஒரு ஓநாய் அல்லது ஓநாய்க் கூட்டம்
ஒரு மரநாய் அல்லது மரநாய்க் கூட்டம்
தாக்கியழிக்க வருவதான பயம் மட்டும்

கார்த்திகை 1995

காற்று

கூந்தலை விரித்தழுகின்ற பெண்ணென
தென்னந் தோப்பிடைக் கிடந்து
குழைந்து, குழைந்து வந்து
என் இதயக் கதவோரம்
ஊதிக் திரிகின்ற காற்றே!

கடற்கரை மணலைக்
கைகளில் வாரிக்
கொட்டிட வருவதாய்க்
காண்கிற கனவில்
வெட்டி ஒரு கணம்
மின்னுகிறதென் கண்கள்.

சுற்றிச் சுழன்று
சுருதி மழை பெய்து
நர்த்தனமிட்டு
ஒழித்து, கூக்குரலிட்டு விளையாடும்
கோலக் கண்ணெனவும் ஆகித் திரிந்த
என் உயிர்க் காற்றே!

தேற்றுவாரின்றி
அந்நியத் தெருக்களில்
அழுது புலம்புகையில்
நல்லதொரு வீணையென மீட்டிக் காட்டுவாய்
உன் நாதக் குழலை
என் நெஞ்செங்கும் பரப்பி
நவமெனச் சுடர்ப்பிப்பாய்!

பூவில் தேனருந்திய வண்டின்
கீதமதை மாந்திக்
கிறுகித் திரிகின்றாய் காற்றே!

தாவணிச் சேலை தழுவித் தளர்த்திடக் கண்டவர்
விழிகளை மேலுயர்த்தி நிற்க
நீ விந்தைகள் புரிவாய்!

பொட்டுக்குள் ஓடி மறைந்த
பூமணியை யாரோ
உள்ளம் கவர் கள்வன் சீண்ட
அவள் சிரிப்பினையும்
எங்கனம் எழிலாய்
எடுத்துத் திரிவாய்
போ காற்றே!
உன் குறும்போ பேசி மாளாது.

நீலக் கடலின்
பாடலை ஏந்தி வந்தென்
நெஞ்சு முற்றத்து நின்று
முகாரித்தழுகின்றதுமேன்?

ஊரில்
எங்கோ ஓர் மூலையில்
தூக்கம் கலைந்தழும்
தொட்டில் குழந்தையின்
குரலைத்தானும் விட்டிலையே

ஊர் அழுகின்ற போதுந்தன்
உள்ளம் அழுகிறது
யார்க்கெடுத்துரைப்பேன் என் காற்றே!
ஏழுலகும்
எடுத்துத் திரிந்துன்
உடலம் எங்ஙனமிளைத்தாய்

ஊரே கூடி ஒப்பாரித்தழுகையில்
கவலை மிக்கதொரு காவியத்தை
ஏற்றி இறக்கி
எந்தன் செவி அருகே
துயரோடு திரிவாய்

எனினும்
உடுக்கொலியும்
பறை முழக்கும்
ஊர்க்காளி கோயில்
மணி ஒலிப்பும் கொணர்ந்து
என் உளத்தை உலுப்பி
உயிர்ப்பிப்பாய் எனின்
வாழி காற்றே

•

தமிழியல் – காலச்சுவடு வெளியீடு

மீண்டும் வரும் நாட்கள் (கவிதைகள்)
மு. புஷ்பராஜன்; ரூ. 60

இவை நகரமும் இல்லாது கிராமமும் இல்லாது இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையில் திகழும் குருநகர் என்னும் கடலோரப் பிரதேசத்தைச் சுற்றிக் கவியும் கவிதைகள்.

வடக்கு கிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்களின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கி வியாபித்துக் கொண்டுவரும் இராணுவப் பயங்கரவாதத்தை வெளிக்காட்டி மௌனித்து நகரும் கவிதைகள்.

தன் சொந்த மண்ணில் தான் வாழ்ந்த காலங்களை, துயரும் மகிழ்வும் தரும் அக்காலங்களை, ஒருவகை nostalgic தன்மை யோடு மீட்டுப்பார்ப்பன போன்ற கவிதைகள்.

தன் ஆத்மார்த்த பார்வையைப் படரவிட்டு அவற்றின் ஒளியில் தன் விடுதலை எழுச்சிக்கு பலம் தேடும் கவிதைகள். இந்நான்கு வகைக் கவிதைகளின் சங்கமிப்பே புஷ்பராஜனின் இந்தக் கவிதைத் தொகுப்பு.